REGD M 4842

# திராவிடநாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 28–11–48 | இதழ் 24



அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருக்கும் தோழர் மணவாள இராமானுஜம் அவர்கள்.

## அவர்கள் சிந்திப்பார்கள்

15-ம் பக்கத் தொடர்ச்சி

இயேசு காட்டிய பாதையில், அவர்களைச் செலுத்த முடியவில்லை. நிலையை உணருகிறார்கள்; வாழ்வு செம்மையாக, இருக்கும் நிலையை மாற்றி அமைத்துக் கொள்வதினால்தான் புதிய சமுதாயம் அமையும், அத்தகைய புதிய சமுதாயத்தில்தான், இயேசுவின் போதனைகள் இடம் பெறும், நன்கு வளரும் என்ற முடிவுக்கு அவர்கள் வரவும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவும் முயற்சிக்க மறுக்கிறார்கள். எனவே, இயேசு ஆலயத்தோடு நின்றுவிடுகிறார்! அவர் கருத்துக்கள் ஏட்டளவோடு இருந்துவிடுகின்றன! மக்கள் இருதயத்திலே அவர் இடம் பெறாமல் அதற்குப்பதில் வாழ்க்கைப் போராட்டத்திற்கான வேறு பல சிந்தனைகள் முடிவுகள் இடம் பெற்றுக் கிடக்கின்றன. தண்ணீர்ப் பாசி விலகிவிட்டு இமை மூடுமுன் திரும்பவும் சேர்ந்துவிடுவது போல், இயேசு இடம் பெறுகிறார் மக்கள் இருதயத்தில்; உடன் மறைந்துவிடுகிறார்!

காந்தியார் காட்டிய பாதை அவர் போதித்த அகிம்சா தத்துவம், அவர் வாழ்நாளிலேயே, வேறு பல கருத்துக்களுக்கு அடிமையாகிவிட்ட மக்களால் புறக்கணிக்கப்பட்டுவிட்டதை நாமும் கண்டோம்; அவரும் கண்டு வேதனை கொண்டார். தாம்கொண்ட கொள்கைகளுக்காக, தம்முயிரையும் முடிவில் பலி கொடுத்துக் கொண்டார்.

அவருடைய உயர்ந்த போதனை, மக்கள் அனைவராலும் பின்பற்றமுடியாது இருப்பது ஒருபக்கம் இருக்க, அவருடைய பெயரை எதற்கெடுத்தாலும் இடைவிடாது பேசிவரும், அவரால் ஏற்றமும், மக்கள் ஆதரவும் பெற்று அதிகாரத்தில் அமர்ந்துள்ள பண்டிதரும்,பட்டேலும், அவர்காட்டிய பாதைவழிதான் செல்லுகிறார்கள் என்று எவராவது கூறத் துணிவார்களா? அவர் வழியை அப்படியே செயலாற்ற முடியவில்லையானாலும், அவருக்கு உயிர்ப் பிரச்னையாக இருந்த இரண்டொரு விஷயங்களிலாவது, அவர் போதித்தபடி நடந்து கொள்ளுகிறார்களா என்பதை அறிஞர்கள் சிந்திக்க வேண்டும்.

ஆத்ம பலத்தினாலேயே, தீமைக்குத் தலைவணங்க மறுத்து நின்றதாலேயே, பலம் பொருந்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் பணிந்துவிட்டது, என்று, 'உலகீரே பாரீர் இதன் புதுமையை! எங்கள் குருநாதர் காட்டிய பாதையின் சக்தியை!' என்று ஐக்ய நாட்டுச் சபையில் பெருமையாகப் பேசிய ஜவஹர், நாக்களவில் காந்தியாரின் வழிக்கு நற்சாட்சி அளித்துவிட்டு, செயலளவில் வருகின்ற பொழுது, அணுகுண்டு செய்யும் அளவிற்கு ஆசையை வளர்த்துக் கொண்டு, 'பாரீர்' டெல்லியின் சிறப்பை! காணீர் எங்கள் இராணுவ அமைப்பை!' என்று ஏகாதிபத்தியத்தைப் பணியவைத்த ஆத்ம சக்திக்கு இழிவைத் தேடும் முறையில் நடந்து கொள்வது, காந்தியார் வகுத்த எந்த முறையைக்கொண்டு பார்த்தாலும் குற்றந்தானே?

, உலகம் செம்மையுற எங்கள் குருநாதர் காட்டிய வழியைப் பின்பற்றுங்கள் என்று ஐக்கியநாடு சபையில் கூடியுள்ள பலதேசப்பிரதிநிதிகளுக்கும் அறிவுரை வழங்கினார் ஜவஹர். அவர்கள் மனங்குளிரக் கேட்டனர். அவர்கள் சிந்தனையிலே சிலபல எண்ணங்கள் தோன்றித்தான் இருக்கும். மபான வைராக்கியம்கூடக் கொண்டிருப்பர். அத்துடன் அவர்கள் சிந்தனை நின்றுவிட்டிருக்காது. ஆத்ம பலத்தின் சக்தியையும், அதனை எடுத்துக்கூறும் ஆற்றல்மிக்க அழகிய உரையையும், இந்தியாவில் ஜவஹரின் அதிகாரத்தின்கீழ்நடைபெற்ற-நடைபெறும் காரியங்களையும் ஒப்பிட்டுப்பார்க்காமல் இரார். நன்கு அலசி ஆராய்ந்து பார்ப்பார்கள். சொல்லுக்கும் செயலுக்கும் எங்கே பிரிவினை ஏற்படுகிறது என்றும்,அவ்வாறு ஏற்படுவதற்கு எதுகாரணம் என்றும் நுணுகி ஆராய்வார்கள். ஆத்ம பலத்தால்வெற்றி பெற்றதாகத் தங்கள் விடுதலைக்கு விளக்கம் கூறும் வீரரின்செயலுக்கும், ஆத்மபலத்தை நம்பாதவர்கள் என்னும் பழிசுமத்தப்படும் தங்கள் நடவடிக்கைக்கும் எந்தெந்த இடத்தில் வேற்றுமை இருக்கிறது, எது எதில் ஒற்றுமை இருக்கிறது என்பதையும் சீர் தூக்கிப்பார்ப்பார்கள். அவர்கள் காணும் முடிவு எதுவாக இருக்கும்?

ஏகாதிபத்யத்தை எதிர்த்தழித்துப் பெருமை கொண்டுள்ள ஆத்மசக்தி, அழகாகப்பேசும் அளவிற்குப்பயன்படுத்தப்படுகின்றதேயன்றி, மேலும் வெற்றிபெற, நினைத்ததை முடிக்க, பலாத்காரத்தை, நவீன போர்க் கருவிகளின் துணையைத்தான் ஆத்மசக்தி பேசும் நாட்டிலும் மேற்கொள்ளப்படுகிறது என்ற முடிவிற்கு வருவார்கள். ஆத்ம சக்தியின் ஜன்ம நாட்டிற்கும், அது கிடையாது என்று சொல்லப்படும் தங்கள் நாட்டிற்கும், நடைமுறையில் வேற்றுமை எதுவும் இல்லையே என்று கவல்வார்கள். வேறு சிலகாரணத்திற்காக, வெளியே சொல்லத்துணிவுகொள்ளாமல்,பண்டிதரின் சொல்லுக்கும் செயலுக்கு உள்ள முரண்பாட்டைத் தங்கள் தங்கள் மனதிற்குள்ளாகவே மூடிவைத்துக்கொள்வார்கள்.

பாலஸ்தீனத்திலே நடக்கும் போர், கிரீஸ் நாட்டிலே நிகழ்ந்துவரும் உள்நாட்டுக்குழப்பம், பெர்லினில் ஏற்பட்டுள்ள அணிவகுப்பு, பிரான்சில் தொழிலாளர் கிளர்ச்சியை ஒடுக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சி, இவ்வளவையும் கீழ்நாடுகளிலே நடைபெற்ற—நடைபெறும் சீனா — ஜப்பான்போர், சீனா உள்நாட்டுப்போர், பர்மாக்கலவரம், ஜாவா சமர், மலாய் குழப்பம், இந்தோசைனா கிளர்ச்சி முதலியவைகளோடு ஒத்திட்டுப் பார்ப்பார்கள், ஐக்கியநாட்டு சபையில் கூடியிருக்கும் அறிஞர்கள். நாஸ்திக ரஷ்யாவின் செஞ்சேனைப் பலத்தையும், கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவியுள்ள நாடான அமெரிக்காவின் இராணுவ பலத்தையும் சிந்தித்துப் பார்ப்பார்கள்.

ஆத்மசக்தியே அணுகுண்டினும் மேல் என்று அலங்காரமாகப்பேசப்படும் நாட்டில்—இந்தியாவில், பிறர் படை எடுப்பைப் போக்கிக்கொள்ள காஷ்மீரில், ஆத்மசக்தியால் வெற்றி வீரர்களாகத் திகழ்பவர்கள் ஆட்சியில், ஆத்மசக்தி கைவிடப்பட்டு, புதிய ஆயுதங்கொண்டு போரிடும் புதுமையே, புதிராக இருப்பதைப் பார்த்துப் பலப்பல உள்ளுக்குள்ளே பேசிக்கொள்வார்கள். மற்ற நாடுகளிலே எந்த அளவிற்கு இராணுவத்தின் வெற்றியிலும் மிருகபலத்திலும் நம்பிக்கை கொள்ளப்பட்டிருக்கிறதோ, அந்த அளவிற்குத்தானே இந்தியாவிலும் இராணுவ பலத்தில் நம்பிக்கை கொள்ளப்பட்டிருக்கிறது. மற்ற நாடுகளுக்கும், இந்தியாவின் செயலுக்கும் ஒரு துளியும் வேற்றுமை இல்லையே! பின் ஏன் பண்டிதர் இவைகளை எல்லாம் ஆத்மசக்தி என்னும் திரைபோட்டு மூடப்பார்க்கிறார் என்றும் அவர்கள் சிந்திப்பார்கள்; உள்ளூரச்சிரிப்பார்கள்!

✱

# ★ தற்காலக் கவிஞர் ★

[சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், 10-11-48 அன்று தோழர் இரா. நெடுஞ்செழியன் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம் வருமாறு]

அவைத்தலைவர் அவர்களே! தோழர்களே! ஈண்டு குழுமியுள்ள உங்களனைவர்க்கும் என் மனமார்ந்த வணக்கமும் அன்பும் உரியவாக. மீண்டும், இவ்வாண்டு உங்களைக் கண்டு அளவளாவும் வாய்ப்பு ஏற்பட்டதற்கு மகிழ்கிறேன். அவ்வாய்ப்பினை ஏற்படுத்திக்கொடுத்த கல்லூரித் தமிழ்ச் சங்கத்தார்க்கு என் நன்றி!

"தற்காலக் கவிஞர்" என்ற பொருளிலுள்ள "கவிஞர்" என்ற சொல்லை, பன்மையை உயர்த்தி நிற்கும் சொல்லாகக் கொண்டால் இற்றை நாளில் வாழும் கவிஞர்கள் பலரைப் பற்றியும் தனித்தனியாகவோ, ஒத்திட்டுப் பார்த்தோ பேசுவதாக முடியும். அப்படிப் பார்க்குப்போது தமிழ்நாட்டில் சிறந்து விளங்கும் கவிஞர்களில், முந்துற நிற்பவர்கள் மூவரே யாவார்கள். அவர்கள் தாம் புதுவை பாரதிதாசன், நாகர்கோயில் தேசிக விநாயகம் அவர்கள், நாமக்கல் வெ. இராமலிங்கம் அவர்கள் ஆவார்கள். இம்மூவரையும் தமிழ்நாடு இன்று போற்றிப் புகழ்கிறது. தமிழ்ப் புலவர்களைப் போற்றுவதும், அவர்களுக்காக இம்மாதிரிக் கல்லூரிகளில் விழாக் கொண்டாடுவதும் தமிழிலக்கிய விழிப்புணர்ச்சி தமிழ் மக்களிடத்தே அரும்பிவிட்டது என்பதை எடுத்துக்காட்டுகிறது. பாரதிதாசன்; தே. வி., நாமக்கல்லார் இந்த மூன்று பெயர்களும் பாமர மக்களிலிருந்து படித்தவர்கள் வரையில் எல்லோருடைய உள்ளங்களிலும், இன்று நடமாடும் பெயர்களாக அமைந்துவிட்டன. இவர்களைக் காட்டிலும், இலக்கண இலக்கியங்களிலே நன்கு கற்றுத் துறைபோயவர்கள் என்று எண்ணப்படுவோர் ஏராளமாக இருந்தும், அவர்களுக்கெல்லாம் இல்லாத மதிப்பு இம்மூவருக்குத்தான் சிறப்பாக அளிக்கப்படுகிறது. காரணம், இம்மூவர்தான் பாமரர்-படித்தவர் என்ற இரு கூட்டத்தவரின் இதயங்களைத் தடவும் வண்ணம் பாட்டிசைத்தார்கள். மக்களின் இதயத்தைத் தடவத்தக்க கவிதைகள் இயற்றி, உலக மக்களின் முன் விசிஎறியும் தன்மைக்கு அடிப்படைக் காரணமாக இருந்தவர் பாரதியாரே யாவார்.

இவர்களெல்லோரும் புரட்சிக் காலத்தில் வாழும் கவிஞர்கள் என்று சொல்லலாம். ஏறக்குறைய கி. பி. இரண்டாவது நூற்றாண்டு வரையில் உள்ள காலத்தை, இலக்கியத்தைப் பொறுத்த அளவில் சங்க காலம் என்று அழைக்கலாம். அதற்குப் பிறகு, அதாவது கி. பி. இரண்டாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பத்தாம் நூற்றாண்டு வரையிலும் சமய காலம் என்னலாம். இக்காலத்தில் தான் சமயத்தை வலியுறுத்தி எழும் தனிப்பட்ட நூல்களும், சமயங்கள் பற்றிய வாதப் பிரதி வாதங்களும் தோன்றின. கி. பி. பத்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டு வரையிலும் புராண காலம் என்று உரைக்கலாம். மதங்கள் குறைந்து, சமயங்களைத் தழுவி எழுந்த புராண இதிகாசங்கள் இக்காலத்தில்தான் நாட்டில் பெருகத் தலைப்பட்டன. கி. பி. பதினைந்தாம் நூற்றாண்டிலிருந்து கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலும் பக்திப் பாசுர காலம். இக்காலத்தில் தோன்றிய பட்டினத்தார், தாயுமானவர், இராமலிங்கர் போன்றவர்கள் துறவறத்தை வலியுறுத்திப் பக்தி மார்க்கத்தைத் தழுவிய பாசுரங்களை இயற்றித் தள்ளினார்கள். கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து தொடங்கி நடைபெற்று வரும் இந்தக் காலம் புரட்சிக் காலம் என்னலாம். இந்தக் காலத்தில்தான் இலக்கியத்திலே புதுக் கருத்துக்களைப்—பழைமைக்குப் புறம்பான கருத்துக்களை—நாட்டிற்குத் தேவையான பகுத்தறிவுக் கருத்துக்களை ஏற்றிப் புரட்சியிலக்கியம் உருவாகும்படி செய்யப்பட்டது. இதற்கு ஆரம்ப வித்திட்டவர் பாரதியார். அவர் எண்ணத்தின் முழு வளர்ச்சி உருவமாக அமைந்து ஈடும் எடுப்பும் அற்ற நிலையில் இறுமாந்து நிற்பது பாரதிதாசன் கவிதையாகும்.

புரட்சிக் காலத்தில் சிறந்து வாழ்ந்து கொண்டிருக்கும் மூவரைப் பற்றிக் குறிப்பிட்டேன். அவர்களில் நாமக்கல் வெ. இராமலிங்கம் அவர்களது பாடல்களில் எளிமை சிறந்து விளங்கக் காண்கிறோம், தேசிக விநாயகம் அவர்களது பாடல்களில் எளிமையோடு, அழகும் சேர்ந்திருக்கக் காண்கிறோம். பாரதிதாசன் பாடல்களில்எளிமை, அழகு இவற்றோடு வீரமும் மிடைந்திருக்கப் பார்க்கிறோம். எளிமை, அழகு, வீரம் இவற்றோடு இன்னும் ஒன்று நம் உள்ளங்களையெல்லாம் கவரும் வண்ணம் அவர் பாடலில் அமைந்து கிடக்கிறது. அதுதான் காலத்திற்கேற்ற விவேகம். இவை அனைத்தும் சேர்ந்து அவரது பாடல்களில் புரட்சிமணம் வீசும்படி செய்கின்றன. ஆகவேதான் பாரதிதாசனைப் 'புரட்சிக் கவிஞர்' பாரதிதாசன் என்று அழைக்கிறோம்.

மூன்று கவிஞர்களைப் பற்றியும் விரித்துக் கூறுவதென்றால் காலம் இடங்கொடுக்காததனின், மூவருள்ளும் முந்துற நிற்கும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனைப் பற்றியே இன்று மாலை சிறிது எடுத்துக் கூற விரும்புகிறேன்.

இலக்கியங்களில், "பூவெனப்படுப பொறிவாழ் பூவே", "ஊரெனப் படுப உறையூரே" என்றுகொள்ளப் படும். அதாவது இலக்கியங்களில் எங்கேயாவது 'பூ' என்று வந்தால் அது தாமரைப் பூவைத்தான் குறிக்கும். எங்கேயாவது 'ஊர்' என்று வந்தால் அது உறையூரைத்தான் குறிக்கும். அவையல்லாமல், 'நீர்' என்று வந்தால் காவிரியைத்தான்குறிக்கும்; 'வேந்தன்' என்றுவந்தால் சோழனைத் தான் குறிக்கும். அவைபோலவே, தற்காலத்தில் "கவிஞர்" என்று கூறினால் பாரதிதாசனைத்தான் குறிக்கும். 'புரட்சிக் கவிஞர்' என்ற சொற்றொடர் எங்கேனும் ஒலிக்கக் கேட்டால் பாரதிதாசன் உருவமும், அவர் பற்றிய நினைவுந்தாம் நம் மனக் கண் முன் வந்து நிற்கும். பாரதிதாசன் இணை, எற்றம் அற்ற புரட்சிக் கவிஞராவர் என்பதை அவரை ஆதரிக்

கும் நாங்கள் மட்டுமல்ல, அவருக்கு நண்பர்களாக விளங்குபவர்கள் மட்டுமல்ல, அவரது பகைவர்கள் நொது மலர்கள் எல்லோருமே ஏற்றுக்கொள்கிறார்கள். யாவருமே அவரைப் போற்றிப் புகழ்ந்து வருகிறார்கள் என்பதை நாம் நன்கு கண்டு வருகிறோம்.

பாரதிதாசன் உள்ளம் புரட்சிக் கவிகளைப் பொழியும் வகையில் அமைந்திருப்பதற்கு அவர் வாழும் புதுச்சேரியும் ஒரு காரணமாகும். பாரதியாரும் அந்த மண்ணில் வாழ்ந்து தான் புரட்சிக் கவிதைகளைத் தமிழ் நாட்டவர்பால் சேர்த்தார். புதுச்சேரி விடுதலை உணர்வு வளரும் இடத்தைச் சார்ந்தது. விடுதலை உணர்வு வளர்ந்த பிரெஞ்சு நாட்டு வரலாறுகள் அங்கு உலாவுகின்றன ........'உரிமை' 'விடுதலை' பற்றிய கருத்துக்கள் மற்ற எந்த மொழி இலக்கியங்களைக் காட்டிலும் பிரெஞ்சு மொழி இலக்கியத்தில் மிகவாக உண்டு என்று அறிஞர்கள் கூறுகிறார்கள். 'சமத்துவம்—சகோதரத்துவம்—விடுதலை' ஆகியவற்றிற்காக நடத்திய புரட்சிப் போராட்டங்கள் பற்றிய வரலாறுகள் அங்கு வாழும் மக்கள் மனக் கண்முன் கொண்டுவரப்படுகின்றன. அத்தகைய புரட்சி எண்ணத்தில் திளைத்த கனகசுப்புரத்தினத்தின் உள்ளம், தமிழ் நாட்டின் இழிந்த நிலையைக் கண்டபோது புரட்சியுள்ளமாக மாறிற்று. கனகசுப்புரத்தினமாக வாழ்ந்த அவர், பாரதியாரைத் தமக்கு வழிகாட்டியாக ஏற்றுக் கொண்டபோது பாரதிதாசனாக ஆனார். பாரதிதாசன் புரட்சிப் பாதையில், முன்னேறும்போது, மிடுக்குடன் அடுக்கி வரும் எதிர்ப்புகளை எல்லாம் தூள்தூளாகச் சிதறடித்து விரைந்து செல்வதைக் கண்ட தமிழகம் அவரைப் புரட்சிக் கவிஞர் என்று அழைத்தது. அவர் எழுப்பும் புரட்சிக் கீதம் இன்று எல்லோர் இதயந்தோறும் சென்று பரவிப் பூரித்து நிற்கிறது.

அவருடைய சொல்லிலே ஒருவித வலிவு காணப்படுவதற்கு அவரது உள்ளம் அத்துணை அளவு உரம் பெற்றிருக்கிறது என்பதுமட்டுமல்லாமல், அவரது உடலின் வல்லாண்மையும் ஓரளவுக்குக் காரணமாக இருந்து வருகிறது. அவரது தோற்றம்—உணர்ச்சியின் உருவம்—புரட்சியின் சின்னம்! கவிதை ஊற்று வெள்ளம்போல் பெருக்கெடுக்கும் அவரது உள்ளமே இன்று மாலை உங்கள் முன் அழைக்கப்படுகிறது!

புரட்சிக் கருத்துக்களைக் கவிதையில் ஏற்றவிடத்தில் எப்படி வைக்கிறார் என்பதற்கு ஒரு உதாரணம் கொடுக்க விரும்புகிறேன். அவர் இயற்றியுள்ள கவிதைகளில் 'புரட்சிக் கவி' என்பது ஒன்று. அதில் இளங் கவிஞன் அரசன் மகளுக்குச் செய்யுளிலக்கணம் சொல்லிக் கொடுப்பதற்கென்று அமர்த்தப்படுகிறான். அப்படிப்பட்ட நிலையை ஏற்படுத்தும்போது இருவர்க்குள்ளும் தொடர்பு ஏதும் ஏற்பட்டுவிடக் கூடாது என்று கருதி, அரசன் தந்திரமான முறை ஒன்றைக் கையாண்டான். அரசன், தன் மகள் அழு நோய் கொண்டவள் என்று கவிஞனிடமும், கவிஞன் கண்ணிரண்டுமில்லாக் குருடன் என்று மகளிடமும் சொல்லிவைத்து, ஆகவே இருவரும் ஒருவரையொருவர் பார்த்தல் நல்லதல்ல என்று சொல்லி நடுவே திரையிட்டுப் பாடஞ் சொல்லிக் கொடுக்கும் முறையை வகுக்கிறான். சிலநாட்கள் சென்ற பிறகு கவிஞனும் அக்காரிகையும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டு விடுகிறது. இருவரும் உள்ளத்தைப் பரிமாறிக்கொண்டு இன்ப வாழ்வு தொடங்கக் காத்திருக்கின்றனர். இதனை அரசன் அறிகிறான். அவன் சினங்கொண்டு வாழ்க்கைத் தொடர்பு அவ்விருவருக்கும் ஏற்படக்கூடாது என்றும், கவிஞன் ஒரு ஏழை—கீழ்ச் சாதியாதலால் அந்தத் தொடர்பைத்தான் எதிர்ப்பதாகவும் கூறுகிறான். இந்த இடங்களிலெல்லாம் கவிஞர் தம் கவித்துவத்தின் முழுத் திறமையையும் காட்டியுள்ளார். அவர் காட்டியுள்ள அளவுக்கு வேறு யாராலும் இக்காலத்தில் காட்ட இயலாது. இறுதியாகக் கவிஞன்—மகள் ஆகிய இருவர்க்கும் கொலைத் தண்டனை விதிக்கிறான் அரசன். அமுதமொழியாளும், அருங் கவிப் புலவனும் கொலை அரங்கம் ஏற்றப்படுகிறார்கள். 'இறுதியாகச் சொல்லவேண்டுவது ஏதேனும் உண்டாயின் உரைக்க' என்று கொலைஞன், கவிஞனிடம் பகர்கிறான். கவிஞன் நாட்டவரை நோக்கிக் கூறுவதாக உள்ள பகுதியில் புரட்சிக்கருத்துக்களைத் தூவியிருப்பதைக் காணலாம். பாழும் நிலத்தையெல்லாம் அழகிய ஊராகச் செய்து தந்தவர் யார்? என்று கவிஞன்வாயால் உலக மக்களைக் கேட்கவைக்கிறார் பாரதிதாசன். உழைக்கும்தோள், பாடுபடும் கை, கடலிலே அடக்கும் மூச்சு, நாட்டை வளமாக்கப் பரிமாறும் பச்சை இரத்தம் இவைகளெல்லாம் யாருடையன? என்று உலகினரை மறைமுகமாகக் கேட்கச் சொல்லுகிறார். புலிவேஷம் போடுவோரையும், எலியாக முயலாக வாழ்வோரையும் முன்னிறுத்தி உலகினரை அவர்களுக்குத் தீர்ப்பு அளிக்கச் சொல்லுகிறார். மேலும் அந்தக் கவிதையின் இறுதியில் மன்னனாட்சி மறைந்து மக்களாட்சி பூத்ததாகக் கொண்டு போய் முடிக்கிறார், இத்தகைய கருத்து அமைந்த அந்தப் பாடல், எந்த அளவுக்குப் புரட்சி மணத்தை வீசுகின்றது என்று பாருங்கள்.

"புதியதோர் உலகம் செய்வோம்" என்று முழக்குகிறார் வேறோர் பாடலில். அதில், "சாதிமத பேதங்கள் மூடப்பழக்க வழக்கங்கள், தாங்கி நடைபெற்றுவரும் சண்டை யுலகினை, ஊதையினில் துரும்புபோல் அலக்கழிப்போம்" என்று அறிவுறுத்துகிறார். பிறகு "ஒழித்திடுவோம்" என்று வீர முழக்கமிடுகிறார். ஒழித்தான பிறகு "புதியதோர் உலகம் செய்வோம்" என்று எச்சரிக்கை விடுகிறார். "பேதமிலா அறிவுடைய அவ்வுலகத்திற்குப், பேர் சுயமரியாதை உலகு எனப் பேர்வைப்போம்" என்று நிலைமையைத் தெளிவு படுத்துகிறார். பிறகு சமுகத்தைப் பார்த்து "யாம் சொன்ன வழியில், ஏறு நீ! ஏறு நீ!! ஏறு நீ!!! ஏறே" என்று கட்டளையிடுகிறார். ஒவ்வொரு சொல்லும் அவருடைய இருதயத்திலிருந்து பீறிட்டு வெளிக்கிளம்புகின்றன. கேட்போர் உள்ளங்களிற் சென்று பதிந்து உறுதிகொள்ளச் செய்கின்றன.

புதுவைக் கவிஞரின் கவிதைகளில் புரட்சி மணம் மட்டுமல்லாமல், பொதுவுடைமை மணமும் சேர்ந்து கமழ்கிறது. பொதுவுடைமைக் கருத்துக்களை வலியுறுத்தும் அழகும் படித்துப் படித்து இன்புறுதற்கு ஏற்ற வகையில் பொருந்தியிருக்கிறது. ஒரே ஒரு எடுத்துக்காட்டு. "பகுத்தறிவு மன்றத்தில்—உலகம் என்ற, பழைய முதலாளியினை நிற்கவைத்து" என்று தொடங்கும் கவிதையைப் பாருங்கள். கவிஞர் பகுத்தறிவு மன்றத்

(13-ம் பக்கம் பார்க்க)

# ★ வானுலக வீதியிலே ★

## வால் நட்சத்திரம்

வால்நட்சத்திரம்! பலநாட்களாக வால்நட்சத்திரம், முளைத்து, மக்கள் கண்டு வருகின்றனர். பலர் பார்த்தனர்—பலர் பார்க்கவில்லை! பார்த்தவர்களும் சரி, பார்த்தவர் கூறக் கேட்டவர்களும் சரி, அதிகமான அளவு, பரபரப்பு அடையவுமில்லை, பயப்பட்டு விடவுமில்லை.

வால்நட்சத்திரம் தெரிகிறதாமே, நீ பார்த்தாயா?—என்று ஒருவருக்கொருவர், சர்வ சதாரணமாகப் பேசிக்கொள்வதுடன் இருக்கிறதே தவிர, "ஐயோ! வால்நட்சத்திரமாமே!" என்று கிலிகொண்டு கூவவில்லை.

"வால்நட்சத்திரம் முளைத்துவிட்டது! மகாஜனங்களே! பக்த சிகாமணிகளே! உலகுக்குப் பெரிய கேடு நேரிட இருக்கிறது. ஆகவே, ஆண்டவனின் கிருபாகடாட்சம் கிடைக்க வேண்டுமென்று, உடனே, அபிஷேகம் செய்யுங்கள், ஆராதனை செய்யுங்கள், தானம் கொடுங்கள்," என்று குருமார்கள் கூறக்கூட இல்லை. மாறாக, கொடைக்கானல் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து, அறிக்கை வெளிவருகிறது, வால்நட்சத்திரம் இன்ன திக்கு நோக்கிச்சென்றுகொண்டிருக்கிறது, அதைக் கவனித்து வருகிறோம், படம் எடுத்திருக்கிறோம் என்று.

படம் எடுத்திருக்கிறார்கள், வால் நாட்சத்திரத்தை, நம் நாட்டில்!!

எவ்வளவு, திடுக்கிடக்கூடிய, மாறுதல்!

சூரிய சந்திர நட்சத்திராதிகளைப் பற்றி, இங்கு இருந்துவரும் கதைகள் கற்பனைகள் யாவும், கலைக்கு உதவாதன என்பது நடைமுறை உண்மையாகிவிட்டது-அந்தக் கதைகளுடன் சம்பந்தப்படுத்தப்பட்ட சடங்குகள், சத்தற்றவை, என்பது உணரப்பட்டு, ஊராள்வோரால் நிர்வகிக்கப்படும், கொடைக்கானல் ஆராய்ச்சி நிலையத்தார், வால்நட்சத்திரத்தைப் படம் எடுத்திருக்கிறார்கள்!!

விண்ணையும் மண்ணையும், காற்றையும் கடலையும், நீரையும் நெருப்பையும் தேவர்களாக்கி—ஒவ்வொரு தேவர்க்கும் தேவியர்க்கும், திருவிளையாடற் கதைகள் கற்பனை செய்து, கவிதைகளாக்கி, ஞானக்கண்ணினரும் இனிமைப்பண்ணினரும் தர, அவைகளையே, அழிக்க முடியாத உண்மைகள், மாற்றமுடியாத தீர்ப்புகள், என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு, வால்நட்சத்திரத்தைப் படம் கூடப்பிடித்திருக்கிறார்கள், என்பது எப்படிப்பட்ட மகத்தான செய்தி!

வால்நட்சத்திரத்தைப் படம் பிடிக்கமுடியும், என்று ஒரு இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன்பு சொன்னால், நம்புவதற்கு இந்த நாட்டில், ஆள் கிடையாது. வாலில்லாத நட்சத்திரங்களைக் கூட, ஆராய முடியும், என்று கூறினால், கேட்பவன், கேலி பேசுகிறாயா? என்று கேட்டிருப்பான், முப்பது ஆண்டுகளுக்கு முன்பு. நமது பாட்டனார் காலத்திலே, இன்றைய அடிப்படை உண்மையையே, நம்ப, ஆள் கிடையாது—பூமி, சூரியனைச் சுற்றுகிறது என்று சொன்னால், பாட்டனார் பல் விழுந்த வாயைத் திறந்து, பயலே! என்னிடமா விளையாடுகிறாய்? என்று தான் கேட்டிருப்பார்!

அப்படிப்பட்ட நாட்டில், ஒருதலைமுறையில், மற்றநாடுகளிலே பத்துத் தலைமுறைகளேனும் பாடுபட்டுக் கண்டுபிடித்த உண்மைகள், சர்வ சாதாரணமானவைகளாக ஆகிவிட்டன.

நமது தலைமுறை, இந்த விஷயத்திலே, மிகமிக, வாய்ப்புப் பெற்றது என்று கூறலாம்.

நமது பாட்டனாருக்கு 'சூரியன் சுற்றுவது' தான் உண்மை! நமது தகப்பனாருக்கு, சுற்றுவது சூரியனா, பூமியா என்ற சந்தேகம்! நமக்கு சூரியன் சுற்றுவதாகக் கருதும் அறிவுச் சூனியர்களும் இருக்கிறார்களே, என்ற கேலி! நமது மகனோ, அவன் மகனோ; சந்திர மண்டலம் போய்வரும் நிலைபெறக்கூடும்!! மாறுதல், அவ்வளவு மகத்தான முறையிலும் வேகத்திலும், ஏற்பட்டவண்ணமிருக்கிறது.

வால்நட்சத்திரம் முளைக்கிறது, என்று கேள்விப்பட்ட உடனே, இங்கு மட்டுமல்ல, உலகில், எல்லா நாடுகளிலுமே, கிலிபிடித்தாட்டிய காலம் இருந்தது—எப்போதோ ஒரு நாள் அல்ல—1910-ல் கூட வால் நட்சத்திரத்தைக்கண்டு, ஐரோப்பிய நாடுகளிலேயே பலருக்கு, அடக்க முடியாத அச்சம்! இன்று, எப்படியோ, அந்த அச்சம் அடங்கிவிட்டது!

பஞ்சாங்கம் இன்னமும் ஆட்சி செய்யும் இங்கேயே, வால்நட்சத்திரத்தைப் படம் எடுத்துவிட்டார்கள் என்றால், அறிவு ஆட்சி செய்யும் மற்ற நாடுகளின் நிலையை விவரிக்கவா வேண்டும்?

வால்நட்சத்திரத்தின், அமைப்பு, இயல்பு, அதுமேற்கொண்டுள்ள பயணம், செல்லும் பாதை, ஆகிய இவ்வளவும், ஞானக்கண்ணினர் அல்ல, விஞ்ஞானக் கண்ணினர் கண்டு பிடித்தது. இப்போதும் இங்கே, வால்நட்சத்திரத்தின் போக்கை, நமக்கு கூறினவர் சங்கராச்சாரியாருமல்ல, தம்பிரானுமல்ல, அவர்களின் திருபாதந்தாங்கிகளுமல்ல, ஆராய்ச்சியாளர்கள்! வால் நட்சத்திரத்தைப் படம் பிடித்துக் காட்டினவரும், விபூதி மகாத்மியத்தாலோ, துளசி மகிமையாலோ, அம்பிகை உபவாசத்தாலோ, அனுமத் பிரபாவத்தாலோ, அல்ல, நமதுமார்க்கத்தவரல்லாத, நமது நாட்டவருமல்லாத, விஞ்ஞானிகள், கருத்துத் தெளிவாலும், ஆராய்ச்சித் திறத்தாலும், அமைத்துள்ள, கருவியின் துணைகொண்டு, கொடைக்கானல் வானிலை ஆராய்ச்சியாளர்கள் படம் பிடித்தனர்.

"படம் பிடித்துவிட்டார்களோ, படம்! என்ன பலனாம்? என்று கேட்கத் தோன்றும் பஜனைப் பிரமுகர்களுக்கு!

பயத்தைப் போக்க—அதுபற்றிக் கட்டிவிடப்பட்ட கட்டுக்கதைகளைப் போக்க—அதன் மூலம் அறிவு

வளர்சிக்கு வழிசெய்ய, உதவுகிறது, இந்த ஆராய்ச்சி.

வைகுந்த கைலாய படப்பிடிப்பாளர்களுக்கு, வால்நட்சத்திரப் படப் பிடிப்பாளர்கள் பற்றிக் கேள்விப் படும்போது, கோபமாகத்தான் இருக்கும்! ஏனெனில், விஞ்ஞானக் கண்ணினரின் ஆக்கம் வளர வளர, ஞானக்கண்ணால் எதை எதையோ கண்டதாகக் கதை பேசிக் காலந் தள்ளும் கபந்தங்களுக்கு, பிழைப்புக் கெட்டுவிடும்.

சந்திரனைப் படம் பிடிக்கிறார்கள், சூரியனில் உள்ள புள்ளிகளைப் படம் பிடிக்கிறார்கள், மழையை வரவழைக்கிறார்கள், என்றெல்லாம், கேள்விப்பட, கேள்விப்பட, எவ்வளவு 'காட்டானாக' இருந்தாலும், அறிவிலே, சிறு சிறு அளவு சுறு சுறுப்பு ஏற்படாமலா போகும்.

முதலிலே நம்பமாட்டான்-பிறகு, திடுக்கிடுவான் — அதற்குப் பிறகு ஆச்சரியமடைவான்-பிறகு, கேட்க ஆரம்பிப்பான் — யாரை? ஞானக் கண்ணினரின் இக்காலப் பிரதிநிதிகளாக உள்ளவர்களை, "ஏஞ்சாமி! எப்படி, இவனுங்களாலே, இதெல்லாம் முடியுது?" என்று. "அதெல்லாம், குப்பா! கலிகாலம்!" என்று பதில் தந்தால், அவன் திருப்தி அடைந்துவிடுவனா? கொஞ்ச நாட்களுக்கு, அதிலேயும் திருப்தியடைவான்! ஆனால் ஒருநாள் வரப்போகிறது, அவன், ஆத்திரத்துடன், கேட்கப் போகிறான், "போ ஐயா! ஒரே புளுகு மயம், நீ பேசுவதெல்லாம்! படம் பிடிச்சு, பளிச்சுப் பளிச்சு என்று உண்மையை அவர்கள் காட்டுகிறார்கள். நீ என்னமோ, புரியாத பாஷையிலே, எதை எதையோபாடி, என்னென்னவோ கதைகளைக் கொட்டி அளக்கிறாயே தவிர, ஒன்றுக்கும் உன்னாலே, ருஜா காட்ட முடியவில்லை—நீ சொல்வது, எதுவும், உண்மைக்கு ஒத்துவரக் காணோம். ஒரு சின்னப்பெட்டியிலே இருக்கிறபொத்தானை அழுத்தறான், பாட்டுப் பாடுது! ஒரு குழாயைக் கொடுத்து, பாருடாப்பா வானத்தை என்கிறான் — சகலமும் தெரியுது, விளக்கமாக. நீ, எதுக்கெடுத்தாலும், கொண்டாடா தட்சணை, விழுடா காலிலே, நம்புடா, நான் சொல்வதை என்று சொல்கிறாயே தவிர, ஒன்றைக்கூட ருஜாப்படுத்த முடியவில்லை உன்னாலே! எப்படி உன் பேச்சை நம்புவது? ஏன் நம்ப வேணும்?" என்று கேட்கப் போகிறான். அது, நமது நாட்களிலேயே நடைபெறவும் போகிறது.

நாம் எதிர்பார்ப்பதைவிட, விரைவாகக் கூட, 'அந்த நலனைக் காணலாம், நம்மில் நெஞ்சு உரமுள்ள ஒரு சிறு அறிவுப்படை மட்டும், 'ஞானக்கண்ணினரின் பிரதிநிதிகள்' என்று பாத்யதை கொண்டாடி, பாமர மக்களின் மனதை மூடநம்பிக்கையின் இருப்பிடமாக்கி வரும் எத்தர்களின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கும் அறிவுப் பிரசாரத்தைச் செய்தால், — அடிப்படை விஞ்ஞான உண்மைகளை, பாமரர் உணரும்படி செய்தால்.

ஒருபுறத்திலே, பூமாதேவி பற்றியும், வானவீதியிலே, நாரதர் பாடிக் கொண்டு போவது பற்றியும், சந்திரனைப் பாம்பு விழுங்குவது பற்றியும், இந்திரன் ஆயிரம் கண் பெற்றது பற்றியும், சித்திரகுப்தன் கணக்கு எழுதியபடி இருப்பது பற்றியும், சக்தியும் சிவனும் நடனம் ஆடுவது பற்றியும், இன்னும் இதுபோன்ற, கற்பனைகளை, ஏடுகள் மூலம், பாட்டுகள் மூலம், கூத்துகள் மூலம், குருக்களின் கூச்சலின் மூலம், பாமர மக்கள், பெற்றுக்கொண்டே உள்ளனர்—நம்பும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர் — அதேபோது, வேறோர் புறத்தில், சந்திரமண்டல ஆராய்ச்சி, சூரியப் புள்ளி பற்றிய விளக்கம், வால் நட்சத்திரப் படப்பிடிப்பு, வானிலை பற்றிய வேறு பல ஆராய்ச்சிகள், ஆகியவற்றையும் செய்தவண்ணம் உள்ளனர்.

இந்த இரு சக்திகளுக்கும் இடையே, பாமர மக்களைத்தள்ளிப், படாத பாடுபடுத்தி வைக்கிற நிலையின்றி, விஞ்ஞான உண்மைகளை, கிராமவாசியும் உணரும் அளவுக்கு அறிவுப் பிரசாரம் நடைபெற்றால், மிக மிக விரைவில், மக்களின் மனம் வளமாகும்.

கிரஹண தோஷம் நீங்க, சமுத்திர ஸ்நானம் செய்யச் சென்று, அங்கு சுழலால் சொர்க்கம் போனவர்களைப் பற்றிய 'சேதி'யைப் பேசும் சட்டசபையின் பிடியிலே தானே நாடு இன்று இருக்கிறது! இப்போது, வால் நட்சத்திரத்தைப் படம் எடுக்கும் அளவுதான் இருக்க முடியும்—அதை ஒட்டியுள்ள விஞ்ஞான உண்மைகள், மக்களுக்கு எடுத்துக் கூறப்படும் நாள் இனித்தான் உதயமாகும்! இந்தப் படப்பிடிப்பு, அதற்கு அறிவிப்பு.

வால் நட்சத்திரத்தின் வரலாற்றினையோ, அல்லது, பொதுவாகவே, வானிலை பற்றிய விஞ்ஞான உண்மைகளையோ, மக்களுக்கு எடுத்துச் சொல்ல, மனம் இல்லை, ஆட்சியாளர்களுக்கும், அவர்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கும்! ஆனால் அவர்களில் யாருக்கும், அவைபற்றி, விஞ்ஞானிகள் கூறியுள்ள உண்மைகளைத் தள்ளிவிடவோ, மறுத்துப்பேசவோ, துணிவு ஏற்பட முடியாது!

விமானத்திலே ஏறிச் செல்லும் முதலமைச்சர், எப்படி, எந்த விஞ்ஞானத்தின் துணையால் 'அனுமான்' கிடைத்ததோ, அந்தவிஞ்ஞானத்தை எப்படி மறுக்க முடியும், உதறித் தள்ள முடியும்!

அதுபோலவே, கிருத்திகைக்கு மௌனவிரதமிருக்கும் அவர், எப்படி, பாமரரிடம் சென்று, விஞ்ஞான உண்மையைக் கூறுவார்! கூறினால், அவரே பழக்கத்தாலும் பயத்தின் காரணமாகவும், நம்பிக் கொண்டிருக்கும் பல, கொள்கைகளை மறுக்க வேண்டி வருமே! வானத்திலே தேவர்கள் உறைவதாகவும், ஆண்டவனின் இருப்பிடம் அதுவே என்றும், கூறப்பட்டுள்ள, கற்பனையை, வானிலை பற்றிய விஞ்ஞான உண்மை மறுக்கிறதே! எடுத்துக் கூற முடியுமா, ஏகாதசி விரதக்காரர்களால், இதனை! ஏழுலோகம் மேலே, ஏழு, கீழே! என்னப்பன் ஸ்ரீவிஷ்ணு இருப்பது வைகுந்தத்தில், பக்கத்தில் பார்வதி சமேதன் கைலாயத்தில், என்று ஞானக்கண்ணினர் கூறிவைத்ததை, அடியோடு மறுத்து, விடுகிறதே விஞ்ஞானம்! எப்படித் துணிவு பிறக்கும், துளசி தீர்த்தத்தைக் குடித்துப் புண்யம் பெறலாம் என்று, எண்ணுபவர்களுக்கு!!

இவர்கள், விஞ்ஞானத்தின் பலன்களையும் பெற்று அனுபவிக்கிறார்கள் —அதேபோது பாமரரின்நம்பிக்கைகளையும் வளர்க்கிறார்கள்—அதிலே பங்கு கொள்கிறார்கள்.

இந்த விசித்திரப் போக்கு மாறி, உண்மையிலேயே, நெஞ்சார விஞ்ஞானத்தை நம்பும் நிலை பிறந்தால், நாட்டிலே, நாம், எதிர்பார்ப்பதைவிட, விரைவிலே, மக்களின் மன

திலே, புதியதோர் மலர்ச்சி காணலாம்.

பாமரரைச் சந்திக்கும்போது, பழைமையைப் பலமாக ஆதரித்து விட்டு, அறிவு உலகில் நடமாட நேரிடுகிறபோது, அதனால் கிடைக்கக்கூடிய பலனையும் பெற்றுக் கொண்டு வாழும், இந்த 'இரு உருவினர்,' தமது போக்குக்காக, வெட்கப்படுவதுமில்லை!

புதுமையைப் போரிட்டுத் தடுக்க, விஞ்ஞானத்தை வேண்டாமென்று விரட்டத் துணிவும் இல்லை, விஞ்ஞானத்தால் பொய்யாக்கப்படும் பழைமையைவிட்டுவிடவும், துணிவு இல்லை. திறந்த வாயினராகின்றனர், விஞ்ஞானத்தின் விசேஷத்தைக் காணும்போது — ஆச்சரியத்தால் நீண்டவாயினராகின்றனர், பழைமையைப் பற்றிப் பேசும்போது. மாதவியையும் கண்ணகியையும் ஒரு மனையில் வைத்துப் பரிபாலிக்கும், புதிய கோவிலர்களாக இருப்பதிலே இவர்களுக்குப் பெருமகிழ்ச்சி! புலி மீதேறி எலிவேட்டைக்குப் போவது போல, விமானம் ஏறிக்கொண்டு, விட்டல பஜனைக்குப் போகும் விசித்திரவான்கள், போல, இவர்கள், கொடைக்கானலில்உள்ள ஆராய்ச்சியாளர்களையும், கேட்கிறார்கள், வால் நட்சத்திரம் பற்றிய தகவல்களைச் சேகரித்து அனுப்பு என்று; அதே போது, வரலட்சுமி விரத மகிமை பற்றி, வானொலி மூலமும் பேசுவர்.

சிலருக்கு, உண்மையிலேயே சந்தேகம்—திகைப்பு-குழப்பம்—"விஞ்ஞானி சொல்வதும் சரியாகத்தான் இருக்கிறது, நமது பூர்வீக ஞானத்தையோ, அடியோடு விட்டுவிடப் பயமாக இருக்கிறது" என்ற குழப்பம் குடைகிறது—குடையும்போது, சுயநலம், குறுக்கிடுகிறது, அதன் வயப்பட்டதும், "நமக்கென்ன, இருசாரருக்கும் நல்லபிள்ளையாகி விடுவோம்—பகை எங்கிருந்தும் கிளம்ப வேண்டாம்—விஞ்ஞானி தருகிற டெலஸ்கோப்பையும் வாங்கிக்கொள்வோம், சனாதனிதருகிற துளசிமாலையையும் போட்டுக்கொள்வோம்" என்று எண்ணுகிறார்கள்.

நாளா வட்டத்தில், இருசாரரும் இவரைச் சந்தேகிக்கத் தொடங்குவர் என்பதோ, இருசாரரும் இவருடைய, இருதயசுத்தியிலே நம்பிக்கை வைக்கமாட்டார்கள் என்பதோ, இந்த இரண்டுங் கெட்டான் பிழைப்புக் கடைசியில், இருசாராராலும் எள்ளி நகையாடப்படும் என்பதையோ, இந்த 'மேதைகள்' எண்ணிப்பார்ப்பதில்லை!

'அறிவுத்தாக்குதல்' பலமாக நடந்தானபிறகே, இந்த அளவுக்காவது, இவர்கள் இடம் கொடுத்தனர். ஒரு காலம் இருந்தது, பிடிவாதமாகப், பொய்யை உண்மை எனக்கொண்டு மெய் உரைக்கத் துணிந்தவர்களைக் கொடுமைப்படுத்திய காலம்.

இயற்கையின் கோலங்களிலே, அடிக்கடியும் நிரந்தரமாகவும், உள்ளவற்றைப்பற்றிப் பல கதைகள் கட்டிவைத்தனர். வால் நட்சத்திரங்கள் அடிக்கடி தோன்றுவன அல்ல —ஆகவேதான், புராணக்கதைகள் இல்லை, வால் நட்சத்திரம், பார்வதியின் ஜடைமுடியிலே, உள்ள ஒரு பட்டுத்துண்டு, அல்லது பரமசிவனின் நெற்றிக்கண்ணிலிருந்து புறப்பட்டு அடங்கும் ஒளிஅம்பு, என்று ஏதும் கதை கட்டவில்லை.

ஒருசமயம், மறுமலர்ச்சி எழுத்தாளரென்னும் புகைப்படலத்துக்குப் பின்னால்இருந்து பழைமைக்குப்பணி புரியும், பதஞ்சலி, பராசார், ரேவதி என்பன போன்ற புனைபெயருடன் யாராவது கிளம்பி, மேலே குறிப்பிட்டது போல, இனி எழுதிவிடவும் முயலக் கூடும்.

வால் நட்சத்திரங்களைக் கண்டு, கிலிகொண்டு, மக்கள் அல்லோலப் பட்டிருக்கின்றனர் முன்னாளில்.

1832-ம் ஆண்டு, தோன்றிய வால் நட்சத்திரத்தால், பூமியே அழிந்துபடும் என்று பயந்து, வீடு வாசல், உடைமைகளை விற்றுவிட்டு, பலர், மாதா கோவில்களிலேபோய்த் தங்கி விட்டனர்—இறக்கும்போது இறைவன் சன்னிதியிலேயே இறப்போம் என்று — வால்நட்சத்திரம் வந்தது, மறைந்தது, உலகம் அழியவில்லை—உடனே, மாதா, கோவில், இவைகளின் மீதல்ல, குறைந்த விலைக்கு விற்றுவிட்ட மனை, மாடு, மணி, இவைகள் மீது சிந்தனை சென்று, சோகித்தனராம்—ஐரோப்பாவில்.

வால் நட்சத்திரம் முளைக்கிறது என்றால், வந்தது விபத்து என்று முடிவு செய்வர், முன்னாளில்.

மாதா கோவில்களில் மணி ஓசை கிளம்பும்! ஜெபமாலைகளுக்கு, அதிகமான கிராக்கி ஏற்படும்! தானதருமம் செய்வராம்! பாவத்தை மன்னிக்கும்படி குருமார்களிடம் கெஞ்சுவார்களாம்! ஆலய மணி அடித்த வண்ணம்மிருந்தால், வால் நட்சத்திரம், கேடு ஏதும் செய்யாமல் போய்விடும் என்று நம்பி, பூஜையை இடைவிடாது செய்வராம்.

மிகப் பழங்காலந்தொட்டு வால் நட்சத்திரம், உலகமக்களை, இவ்வளவு மிரட்டியிருக்கிறது. எனினும், விஞ்ஞானம், அஞ்சாது படை எடுத்து, இந்தப்'பயமூட்டி'யைப் படமெடுத்துத் தந்து விட்டது.

ஞானக்கண்ணினர் கூறினர், "அதோ பார், வால் நட்சத்திரம்! ஆண்டவனின் சீற்றம்! அழிவு வருகிறது என்பதைக் காட்டும் அறிகுறி" என்று. விஞ்ஞானக்கண்ணினர், கூறுகின்றனர், "வால் நட்சத்திரம், கிரஹங்களைப் போலவே, சூரியனைச் சுற்றி வருகின்றது. நீண்ட கோழி முட்டை வடிவில், அது செல்லும் பாதை, அமைந்திருக்கிறது, அஞ்சாதே! வால்நட்சத்திரங்கள் ஒன்று இரண்டு அல்ல, ஓராயிரம் ஈராயிரமல்ல, சூரிய மண்டலத்திலே! இலட்சத்துக்கு மேற்பட்ட வால்நட்சத்திரங்கள் உள்ளன. ஒவ்வொன்றும் வெவ்வேறு பாதைகளில் சுற்றி வருகின்றன. ஒருமுறை பயணம் செய்து திரும்ப, ஒவ்வொரு வால் நட்சத்திரத்துக்கும், வெவ்வேறுகால அளவு பிடிக்கும். சில வால் நட்சத்திரங்கள் 3½ வருஷத்தில், சூரியனைச் சுற்றிவிட்டுவரும்—சில வால் நட்சத்திரங்கள் 10-இலட்சம் ஆண்டுக்காலம் பிடிக்கும், சுற்றி விட்டு வர!" என்று.

இந்த முடிவுகளுக்கு, ஆதாரங்களை, ஆராய்ச்சிகளை, விஞ்ஞானிகள் கூறுகின்றனர், எப்படி, படிப்படியாகச் சென்று இந்த உண்மையைக் கண்டறிய முடிந்தது என்பதையும் விளக்கியுள்ளனர்.

முதலிலே, யாருக்குமே புரியத்தான் இல்லை, வால் நட்சத்திரம், எங்கிருந்து கிளம்புகிறது, எங்கே போகிறது, எப்படி மறைகிறது, அதன் இயல்பு என்ன என்பதெல்லாம்.

வால் நட்சத்திரங்கள் சீன சாம்ராஜ்யம், ஜெருசல சாம்ராஜ்யம், கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்கள் ஆகியவைகள் ஜொலிப்புடன் இருந்த நாட்களிலேயும்தோன்றின. ஆராய்ச்

(10-ம்பக்கம் பார்க்க)

திராவிட நாடு
காஞ்சி] 28—11—48 [ஞாயிறு

# எச்சரிக்கைப்பிரியர்!

எச்சரிக்கை!

ஆமாம்! நமக்கு!!

நமக்கு மட்டுமல்ல, எதிர்ப்பட்டோருக்கெல்லாம்!

இந்தி எதிர்ப்பாளருக்கு, எச்சரிக்கை!

திராவிடர் கழகத்தாருக்கு எச்சரிக்கை!

முதலாளிகளுக்கு எச்சரிக்கை!

தொழிலாளிக்கு எச்சரிக்கை!

கம்யூனிஸ்டுக்கு எச்சரிக்கை!

சோஷியலிஸ்டுக்கு எச்சரிக்கை!

காங்கிரஸ் மந்திரிகளுக்கு எச்சரிக்கை!

இப்படி, எல்லோருக்கும் எச்சரிக்கை!

எடுத்ததெற்கெல்லாம் எச்சரிக்கை!

யார் இந்த 'எச்சரிக்கைப் பிரியர்' என்று அறிந்துகொள்ள வேண்டுமென்று, நண்பர்கள் ஆவல் கொள்வர்.

ஒரு வாரத்து, தேசியத் தமிழ் இதழ்களைப் பார்த்தால் புரியும், இந்த எச்சரிக்கைப் பிரியர், யார் என்பது!

மாயவரத்திலே, மார் தட்டுகிறார், இந்தி எதிர்ப்பாளர்களை, ஒழித்து விட்டு மறுவேலை, என்று. பூலாங்குறிச்சியில் பேசுகிறார், இந்தக் காங்கிரஸ் மந்திரிகள், காங்கிரசாரின் தொடர்பு இன்றி, பல தவறுகளைச் செய்துவிடுகிறார்கள் — இந்தியை எதிர்த்து முன்பு 1800 பேர் சிறை சென்றனர் என்பது தெரிந்திருந்தும், கல்வி மந்திரி கருத்தற்ற முறையிலே காரியம் செய்துவிட்டார், என்று. ஒரு ஊரிலே, முதலாளிகளைக் கண்டிக்கிறார், ஒழுங்காக நடவுங்கள்—இல்லையேல்........ என்று கூறி மிரட்டுகிறார்.

மற்றோர் ஊரிலே, தொழிலாளரை மிரட்டுகிறார், ஜாக்ரதை, கிளர்ச்சிகளிலே ஈடுபடக்கூடாது, கடுமையான நடவடிக்கை கிளம்பும் என்று பேசுகிறார்.

கம்யூனிஸ்டுகளைக் கண்டிக்கிறேன் —அவர்கள் நாட்டைக் காட்டிக் கொடுப்பவர்கள் என்கிறார் ஒரு ஊரில்.

சோஷியலிஸ்டுகள், நாட்டைக் கெடுக்கிறார்கள் என்று சாடுகிறார் இன்னோர் ஊரில்.

எல்லோருக்கும், எச்சரிக்கை தான்! அவ்வளவு உயர உயரமாக ஏறிக் குதிக்கிறார். அவருடைய பேச்சுகளைப் பார்க்கும் போது, 'இழந்த காதல்' நாடகத்திலே, ஜெகதீஸ், பேசுவானே, இது உனக்கு முதல் தடவை!—என்று, ஒவ்வொரு தடவையும்; அதுபோலவே தொனிக்கிறது!

கையில் சவுக்குடன், காலையிலே, ஒரு சுற்றுச் சுற்றி, துஷ்ட மிருகங்கள் இருக்கும் கூண்டுகளின் அருகே வந்து நின்று, பளீர்—பளீர்—என்று சத்தத்தைச் சவுக்கால் கிளப்பிவிடும், சர்க்கஸ் மேனேஜர் போல, ஊருருக்கும் சென்று உன்னை எச்சரிக்கிறேன்—உன்னையுந்தான் - எச்சரிக்கை, உனக்கு-எச்சரிக்கை, எச்சரிக்கை, எல்லோருக்கும் எச்சரிக்கை, என்று கூறி வருகிறார், தமிழ்நாடு காங்கிரசின் தலைவர், காமராஜ்.

காங்கிரஸ் மந்திரிக்கும் கண்டனம்; கம்யூனிஸ்டுக்கும் கண்டனம்; கல்வி மந்திரி கருத்தறியாது இந்தியைப் புகுத்துவதற்கும் கண்டனம், அதை எதிர்க்கும் திராவிடர் கழகத்தாருக்கும் கண்டனம்; எதற்கும், எவருக்கும், இவருடைய கண்டனம் பிறக்கிறது. அவ்வளவு ஆற்றல் கொண்டவராகக் காட்சி அளிக்கிறார்—செச்சே! தவறிவிட்டோம்—கனவு காண்கிறார்!!

காமராஜர், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவர்—காங்கிரஸ் நாடாள்கிறது—நாடாள்வோரால், எதிர்ப்பாளர்களை, கொடுமைப்படுத்த முடியும்—அறிந்துதான், எதிர்ப்பாளர்கள் பணி புரிகின்றனர் – எச்சரிக்கைக்காரர், என்னென்ன செய்வார் என்பதை அறியாமல் அல்ல.

இந்தஎச்சரிக்கைக்காரரின், முன்னாள் இந்நாள் நிலையை மட்டுமல்ல, எதிர்கால நிலை எப்படியாகும் என்பதையும் அறிந்தவர்கள்தான் எதிர்ப்பாளர்கள்.

எந்தெந்தப்பிரச்னைகளை, எச்சரிக்கைக்காரர், புரிந்து கொள்வார் எவைகளைப் புரிந்துகொள்ளமாட்டார், என்பதையும் அறிவர்—எ தெந்தப் பிரச்னைகளை இவர் மக் ளுக்குப் புரியவைக்கிறார் — புரி வைக்கும் திறமை கொண்டவ என்பதையும் அறிந்திருக்கிறோம்.

ஒரே ஒரு பிரச்னை அவருக்கு புரிகிறது—புரியவைத்து மிருக்கிறார்- காங்கிரசுக்கு ஆட்சிப்பீடம் ஏறி கொண்டுள்ள நிலையில், யாரையும் காரணமின்றியும், கடுமையாகச் சொல்லாலும் செயலாலும் தாக்கலாம் என்ற துணிவு இருக்கிறது, என்பதுதான், அவருக்குப் புரிந்துள்ள ஒரே பிரச்னை; அதையே தான், அவர், தம்முடைய கூட்டுத் தோழர்களுக்குப் புரியவைக்கிறார். இதற்காகவே சுற்றி வருகிறார்—மக்களுக்குச் சுகவாழ்வு கிடைக்கும் வழிவகை கூற அல்ல.

பஞ்ச நிலைமை நாட்டில்! பட்டினிச் சாவு ஏற்பட்டிருக்கிறது! விலைவாசி விஷம்போல் ஏறிவிட்டது! வேலையில்லாத் திண்டாட்டம்வாட்டுகிறது! கூலி போதாத குறைபாடு கொட்டுகிறது! திட்டம் ஏதும் இன்றி ஆட்சிப் போக்கு இருப்பது கண்டு திகைப்பு வளருகிறது! தொழில் வளம் குறைகிறது! துயரம் அதிகரிக்கிறது! மொழிவாரிப் பிரிவினைக் கோரிக்கை, புயலாகிறது! இவையும் இவைபோன்ற வேறு பல பிரச்னைகளும், நாட்டு மக்களை வாட்டுகின்றன.

காமராஜர் வருகிறார், ஒரு காற்படியாவது அரிசியின் அளவு அதிகப்பட வழி கூறுவார், கூலி உயர வழிசொல்லுவார், குறைபாடுபோகத் திட்டம் வகுப்பார், ஆட்சியாளர் வகுக்கஇருக்கும் திட்டம்பற்றிப் பேசுவார், நாட்டின் வளத்தைப் பெருக்க வழி கோலுவார், அவர் தமிழ்நாட்டுக் காங்கிரசின் தலைவராயிற்றே, பொறுப்புடன் பேசுவார், பிரச்னைகளை விளக்குவார், என்று மக்கள் எதிர்பார்ப்பரே என்ற கவலை அவருக்கு இல்லை—இருக்கக் காரணமுமில்லை — அப்படிப்பட்ட பிரச்னைகளைப் பற்றி ஆராயும் திறமையைத் தம்மிடம் மக்கள் எதிர்பார்க்கமாட்டார்கள் என்பதை அவர் அறிவார் — சட்டசபையிலே மன்னன், ஒரு நாளாவது, வாயைத் திறந்து, இன்ன காரியத்தை இப்படிச் செய்தால் நல்லது, இன்ன திட்

டத்தில் இன்ன தவறு இருக்கிறது, என்று எடுத்துக் காட்டியதுண்டா? இல்லையே! மக்கள் பிறகு, ஏன் அவரிடமிருந்து பிரச்னைகளைப் பற்றிய விளக்க உரையை எதிர்பார்க்கப் போகிறார்கள்!

அவர் வருகிறார்—எதிர்க்கட்சியினரைத் தாக்கிப்பேசுவார் — நண்பர்கள் எண்ணுகிறார்கள். எனக்குத் தெரிந்ததும் அதுதான்—அவரே எண்ணுகிறார். எனவே, ஒரே எச்சரிக்கை மயம், ஒவ்வொரு பேச்சிலும்.

ஒரு எச்சரிக்கை, மற்றோர் எச்சரிக்கையை மறுத்து விடுவதாக இருக்கிறதே, கல்வி மந்திரியின் கருத்தற்ற போக்கையும் கண்டித்துவிட்டு, அதே போது அவர் போக்கைக் கண்டிக்கும் இந்தி எதிர்ப்பாளரையும் கண்டிக்கிறோமே, இரண்டும் ஒன்றோடொன்று பொருந்தாதே—என்று, சொற்பொழிவுகளில் — அதிலும் பொறுப்பானவர்களின் சொற்பொழிவுகளில் — நேர்மையும், பொருத்தமும் இருக்கவேண்டும் என்ற எண்ணமுடையவர்கள் கருதுவர். அவருக்கு அதுபற்றிக் கவலை இல்லை! அவருக்கு எச்சரிக்கைவிடத் தெரியும் — செய்கிறார் — அந்தநிலை தமக்கு இருப்பதாகக் கருதிச்செய்கிறார். எச்சரிக்கை விடுவதன் மூலம், எதிர்ப்பாளர்களெல்லாம், இடி கேட்ட பாம்பாம்பாகிவிடுவர் என்று கருதுகிறார், கர்ஜிக்கிறார்!

காமராஜரே! கர்ஜனைபுரியும் தாராளமாக!! ஆனால் காலம் போகிற போக்கையும் கொஞ்சம் கவனித்துக்கொண்டுவாரும்.

சீனாவிலே, கோ—மின்—டாங் கட்சிக்கு எதிர்த்துப் பேச, வேறு கட்சியே கிடையாது! அப்படிப் பட்ட நிலைதான் இருந்தது. சியாங் சிங்கம், இன்று, என்ன நிலையிலிருக்கிறது, ஆபத்து அதிகமானால், எங்கே சென்று தங்கலாம், புதுடில்லிக்கா, பழைய வாஷிங்டனுக்கா—என்று யோசிக்கும் வேளை.

சியாங்கைவிட, காமராஜர் சீற்றம் கொண்டவர் என்பது தெரிகிறது—ஆனால் ஆற்றல் மிக்கவரா? நாம் மட்டுமல்ல சந்தேகிப்பவர்—அவருக்கே அந்தச்சந்தேகம் ஏற்படும்.

கம்யூனிஸ்டுகளை ஒடுக்கியே தீருவது, என்றஎச்சரிக்கையின், விளைவு தான், சியாங்கின் விசாரம்!

மாயவரம், நெல்லிக்குப்பம், அம்பாசமுத்திரம், அறந்தாங்கி, இவைகளோடு, உலகம் முடிந்துவிடுவதாக எண்ணுகிறார், எச்சரிக்கை வீரர்! உலகிலே உள்ள பலநாடுகளிலும், ஆதிக்கக்காரர்களின் ஆணவத்தை முறியடிக்க, சக்திகள், எங்கெங்கிருந்தோ, எப்படி எப்படியோ உருண்டுதிரண்டு வருவதையும் கவனித்துப் பார்ப்பது நல்லது—ஓய்வு கிடைக்கும்போது.

திராவிடர்கழகத்தைப் பொறுத்தவரையில், நாம் கூறமுடியும், எச்சரிக்கைகளை வாரிவீசும்—முடிந்தால் அடக்குமுறையையும் அள்ளிவிடும்—சகாக்களைத் தூண்டிவிடும்—இது கூடச் செய்யாதிருந்தால், உமக்கும் வேறுவேலைதான், என்ன இருக்கிறது. நீர் என்ன, பாபம், அரசியல் நிர்ணயசபையிலே புதியதிட்டம் தீட்டுகிறார்களே, அதை அலசிப் பார்த்து, இதுசரி, இதுதவறு என்று எடுத்துக்காட்டப் போகிறீரா, ஜெமீன் ஒழிப்புத்திட்டத்தை இன்னமுறையிலே அமுல்நடத்த வேண்டும் என்று யோசனை கூறப்போகிறீரா, முதலாளி—தொழிலாளி சச்சரவு போக்க, வாழ்க்கைத்திட்டமும் பொருள் உற்பத்தித்திட்டமும் பகை கொள்ளாதிருக்கும் புதிய திட்டம் வகுக்கப் போகிறீரா—அதெல்லாம் இல்லையே — சிரமமானகாரியங்கள் அல்லவா அவை—சிந்தனைவேண்டும், ஆராய்ச்சிவேண்டும்—கஷ்டம்—எச்சரிக்கைகள் விடுத்தவண்ணம் இருப்பது சுலபம், சீற்றமும் ஆத்திரமும் போதும். இவ்வளவு பெரியநிலையிலுள்ள உமக்கு, இந்த இருபெருங் குணம்கூடவா, இராமற்போகும்!

குயிலினிடம் நடனத்தையோ, மயிலினிடம் இசையையோ, எதிர்பார்க்கமுடியுமா? நாம், உம்மிடம் அதிகம் ஏதும் எதிர்பார்க்கவில்லை; சிறிதளவு எம்மை அறிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள், என்று மட்டுந்தான் கூறுகிறோம்.

திராவிடர் கழகம், எச்சரிக்கைகளால் மாய்ந்து போகும் நிலையில் இல்லை—இதைத்தெரிந்து கொள்ளும் முதலில்.

அடக்குமுறையை வீசும் ஆற்றல் உமது கட்சியிடம் இருக்கிறது, என்பதை அறியாமலும் இல்லை—நீர் கவனப்படுத்த!

திராவிடர்கழகம், மக்களின்மனக் கொதிப்பின் இருப்பிடம், மட்டுமல்ல, புகலிடம். அதிலே உள்ளவர்களை, அறியமாட்டீர்கள்—உமது அதிகார அந்தஸ்து அதற்கு இடந்தராது—தாலமுத்து, நடராஜன்கள் மட்டுமல்ல, வேலாயுதங்களாவதற்கும் விசாரப்படாதவர்களே ஏராளம்.

எச்சரிக்கைகளைச் சரமாரியாக ஏவுகிறீர்—இதனையும் ஏற்றுக்கொள்ளும்—உமது ஆற்றல், ஏழைக்காக வாதாடுபவர்களை, தமிழுக்காகப்பேசுபவர்களை, மக்களாட்சிக்காகப் பணியாற்றுபவர்களை, தன்மானத்துக்காகப் போரிடுபவர்களை, ஜாதியை ஒழித்து, மூட நம்பிக்கையை முறியடித்து, எல்லோரும் ஓர் குலம் என்ற இலட்சியத்தையும், சாண்டாள் முறை ஒழிந்த ஒரு சமுதாயத்தையும் காணவேண்டுமென்பதற்காகப் பாடுபடுபவர்களை, ஒழிக்கப் பயன்படுமானால், தாராளமாகப் பயன்படட்டும். உலக வரலாறு கூறுவது இதையல்ல! எச்சரிக்கைகள் மூலமோ, அடக்குமுறை மூலமோ மக்களின் எழுச்சியை அடக்கிய ஆற்றலரசர்களின் வெற்றியை அல்ல, வேதனை மிகுந்த தோல்வியைத்தான் சரித்திரம் காட்டுகிறது. அதைமட்டும் உமக்குக் கவனப்படுத்துகிறோம்.

செச்சே! மீண்டும் தவறு செய்துவிட்டோம் — உமக்கு, சரிதத்தைப் பார்க்க நேரமேது — எந்த அமைச்சரை நீக்கிவிட்டு, யாரை நுழைக்கலாம், என்ற வேலையின் இடையே, இதெல்லாம் முடிகிற காரியமா!

உமக்கு அல்ல, நாட்டுக்குச் சரிதத்தைக் கவனப்படுத்துகிறோம்.

✱

## பாராட்டுகிறோம்

—✱—

டாக்டர் எஸ். ஜி. மணவாள இராமானுஜம், எம். ஏ; பி. எச் டி; டி. ஐ. ஈ. அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தராக நியமிக்கப்பட்டதறிந்து மகிழ்ச்சியடைகிறோம்.

ஒரு பல்கலைக் கழகத்திற்குத் துணை வேந்தராக வருபவர், அப்பல்கலைக் கழகப் பயிற்சி முறைகளையும், அதன் நோக்கத்தையும், அங்கு கையாளப்பட வேண்டிய படிப்பு முறைகளையும் நன்கறிந்தவராக இருத்தல் வேண்டுமென்பதை உணர்ந்து, அந்த இடத்துக்கு

எல்லா வகையிலும் தகுதிவாய்ந்த டாக்டர் மணவாள இராமானுஜம் அவர்கள் துணைவேந்தராக நியமிக்கப்பட்டது பெரிதும் வரவேற்கக் கூடியதாகும்.

பல்கலைக் கழக மாணவர்கள், அஞ்ஞானத்தை ஒழித்து விஞ்ஞானத் துறையில் முன்னேற வேண்டுமென்ற அடிப்படை நோக்கத்துடனேயே அங்கு கல்வி பயிலச் செல்கின்றனர் என்பது பல்கலைக் கழகப் பொது விதியாகும். எனவே இந்தத் துறையில் மாணவர்களை முன்னேற்றமடையச் செய்யும் ஆற்றல் வாய்ந்த ஒரு விஞ்ஞான அறிஞர் அண்மையில் பல்கலைக் கழகத்திற்குத் துணைவேந்தராக நியமிக்கப்பட்டிருப்பதைப் பாராட்டுவதுடன், அவருடைய சேவை எதிர்பார்க்கும் எதிர்கால விஞ்ஞான உலகுக்கு ஒரு சிறந்தவழி காட்டியாக இருக்கும் என்றும் நம்புகிறோம்.

●

## வானுலக வீதியிலே

7-ம் பக்கத் தொடர்ச்சி

சியாளர்கள், கி. மு. 48-ல், கி. பி. 69-ல், கி. பி. 79-ல், கி பி. 451-ல், கி. பி. 455-ல், கி. பி. 1000-ல், கி. பி 1076-ல், கி. பி. 1456, கி. பி. 1832, கி. பி. 1910-ல், என்று இப்படிப் பலதடவைகள் தோன்றிய வால் நட்சத்திரங்களைப் பற்றிய, ஆராய்ச்சிகளை, அறிவுமன்றத்துக்கு அளித்திருக்கிறார்கள்.

இவை தோன்றிய ஒவ்வொரு சமயத்திலும், ஏதேனும் ஓர்வகை அழிவு நேர்ந்திருக்கிறது உலகில், ஒரு பேரரசனின் மரணம், பெருவெள்ளம், பெருநெருப்பு, படைஎடுப்பு, சாம்ராஜ்யச் சிதைவு, என்பன போன்ற, ஏதேனும் ஒன்று நடைபெற்றுள்ளன—வால்நட்சத்திரத்தைப்பற்றி மட்டுமல்ல, பொதுவாகவே வானநிலை பற்றிய ஆராயச்சியே உருவடையாதிருந்த காரணத்தால், இந்தச் சம்பவங்களுக்கும், வால் நட்சத்திரம் தோன்றியதற்கும், தொடர்பு வைத்து, இதனால்தான் அது,என்று மக்கள் நம்பினர்.

வால்நட்சத்திரங்களே தோன்றாத நாட்களிலே, இதுபோன்ற 'விபத்துகள்' ஏற்படவே இல்லையா!—விஞ்ஞானி கேட்டுக்கொண்டான் தன்னைத்தானே! நாமும் கேட்டுக்கொள்ளலாம். சுபாஷ்பாபு மறைந்தார்—எந்த வால்நட்சத்திரம் முளைத்தது! காந்தியார் மறைந்தார்—வால்நட்சத்திரம் முளைத்ததா! ஜின்னா மறைந்தார்—வால்நட்சத்திரம் உண்டா? அவுங்சான் மறைந்தார்—வால் நட்சத்திரம் முளைக்காமலேயே! பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் கலைக்கப்பட்டது—வால்நட்சத்திரம் தோன்றி அல்ல! ஹிட்லரின் ராஜ்யம், முசோலினியின் ராஜ்யம், ஜப்பானிய ராணுவ ராஜ்யம், எல்லாம் அழிந்தன—வானுலகில் வால்வெள்ளி தோன்றி அல்ல, விண்ணிலே, விமானங்கள் வேண்டிய அளவு பறந்து, குண்டு மழை பொழிந்ததால்.

உலகிலே, மக்கள் மனதை உலுக்கக்கூடிய, எவ்வளவோ, விபத்துகள் ஏற்பட்டபோதெல்லாம், வால்நட்சத்திரம் வந்ததில்லை. விஞ்ஞானி பிறகு கூறினான், "வால்நட்சத்திரத்துக்கும் விபத்துக்கும் சம்பந்தமில்லை, அஞ்சாதே!" என்று.

வால் நட்சத்திரத்தை, பூமியிலிருந்து வெளிப்படும் புகை என்று, அரிஸ்டாடில் கூறினார். அவர் அறிஞர்தான்—ஆயினும் அவரே அது போலக் கூறிவிட்டாரே, என்று சும்மா இருந்துவிட்டனரா? இல்லை! அவர் அறிந்தது அவ்வளவுதான்—நாம் ஆராய்வோம், என்று எண்ணினர். ரோம்நாட்டு அறிஞர் சேனகா ஒருபடி முன்னேறினார், "முன் கூட்டியே சொல்ல முடியும், வால் நட்சத்திரம் எப்போது வருமென்பதை" என்று சொன்னார்.

விஞ்ஞான முறையிலே, வால் நட்சத்திரத்தைப் பற்றி ஆராய்ந்தவர், ஹாலி என்பவர். அவர், 1682ல் தோன்றிய வால்நட்சத்திரம், சூரியனைச் சுற்றிவிட்டு, 76 ஆண்டுகள் கழித்து மீண்டும் தோன்றும் என்று கூறினார். அதன்படியே 1759ல்,வால் நட்சத்திரம் வந்தது.

ஹாலி, 1682ல் தோன்றிய வால் நட்சத்திரம் இவ்வண்ணம் இயல்பு கொண்டது, 1759ல் அது மீண்டும் தோன்றும், கவனித்துப் பாருங்கள்—என்று கூறினார். யாரும் நம்பவில்லை. அவரும் இறந்துவிட்டார். ஆனால் அவர் சொன்னபடி 1759ல் வால் நட்சத்திரம் தோன்றிற்று. மக்கள் அவர் அறிவை வியந்தனர்—விஞ்ஞானத்தைப் போற்றினர்—அந்த வால்நட்சத்திரத்தை, ஹாலி வால்நட்சத்திரம் என்று பெயரிட்டனர்.

பிறகு, வால் நட்சத்திரத்தைப் பற்றிய, விவரமான ஆராய்ச்சிகள் தொடர்ந்து வெளிவரலாயின.

ஹாலி வால்நட்சத்திரம், 1682ல் ஒருமுறை தோன்றி, 76 ஆண்டுகள் பயணம் செய்து, சூரியனைச் சுற்றிவிட்டு 1759-ல் மீண்டும் வந்தது மட்டுமல்ல, அது மறுபடியும் மறுபடியும் அந்தக் குறிப்பிட்ட கால அளவில் வருவதையும் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.

1910ல், ஹாலி வால்நட்சத்திரம் வந்தது—மீண்டும் 1986ல் ஹாலி வால்நட்சத்திரம் வரும், என்று குறித்து வைத்திருக்கிறார்கள்.

வால்நட்சத்திரம், விஞ்ஞானக் கண்ணுக்கு, மிகவசீகரமான தோற்றத்துடன் காட்சி அளிக்கிறது. பல வித வர்ணங்கள் உள்ளனவாம்! கண் கூசும் ஒளியாம்! இருண்ட வெளியிலிருந்து கிளம்பி, சூரியனைச் சுற்றிக் கொண்டு செல்கிறதாம்.

வால்நட்சத்திரத்தின் தலைப்பகுதி 30,000-த்திலிருந்து 1,50,000மைல் வரை இருக்குமாம்! வால், சிலவற்றுக்கு 10 கோடிமைல் நீளமாம், சில வற்றுக்கு, 20 கோடி மைல் நீளமாம்.

சூரியனிலிருந்து பலப்பல கோடி மைல்களுக்கப்பால் சென்று, வால் நட்சத்திரம் திரும்புகிறது.

1811ல் தோன்றிய வால்நட்சத்திரம், சூரியனிலிருந்து 4000 கோடி மைல் தூரம் சென்று திரும்ப வேண்டும், 3000 ஆண்டுகள் பிடிக்குமாம் இது தன் பயணத்தை முடிக்க—மறு பயணத்தைதுவக்க. அதாவது, இந்த வால்நட்சத்திரம் மீண்டும் **4811**ல் தோன்றும்!

காற்றை விட மிக இலேசான பொருள், வால்நட்சத்திரம்.

இவ்வளவு, விஞ்ஞான உண்மைகளுக்கும், ஆதாரங்கள் உள்ளன.

படமும் எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது.

ஞானக் கண்ணினர் கண்ட காட்சிக்கும், இன்று விஞ்ஞானக் கண்ணினர் காணும்காட்சிக்கும், ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுகிறோம்.

ஐயோ!—என்று கூக்குரலிட வைத்தனர், ஞானக் கண்ணினர், இதனைத் தூமகேது என்று கூறி.

ஆஹா!—என்று வியந்து கூற வைக்கின்றனர், விஞ்ஞானக்கண்ணினர், படத்தையும் காட்டி!

வால் நட்சத்திரம், சாதாரண நட்சத்திரங்கள், மற்றும் வானவெளியிலே உள்ள சகல உண்மைகளையும் விஞ்ஞானக் கண்ணினர் கண்டறிந்து கூறக் கூற, 'ஞானக்கண்ணினர்' கண்ட காட்சிகள் பலவும் கற்பனைகள் என்பது வெட்டவெளிச்சமாகி விடுகின்றன. வானவீதியிலே தேவர்கள் உலவுவர் என்பதும், அந்தப் பூந்தோட்டு மல்லிகைகள் இந்த நட்சத்திரங்கள் என்பதும், இன்னும் இதுபோன்ற எண்ணற்ற பல கட்டுக்கதைகளும், ஒரு காலத்தில், மத உண்மைகளாக, ஞானவாசகங்களாக, மார்க்க போதனைகளாகக் கருதப்பட்டன—நம்பப்பட்டன.

ஒரு நாட்டிலே மட்டுமல்ல, பல நாடுகளிலும், வானவெளியைப்பற்றி விசித்திரமான கதைகள் நம்பப்பட்டுத்தான் வந்தன.

சீனப் புராணிகர்கள், வால் நட்சத்திரங்களை, மேலுலக அரசியல் தூதுவர்களாகக் கருதினர். பூலோகம் போலவே, வானலோகமும் பல நாடுகள் கொண்டதாக இருப்பதாகவும், பூலோக நாடு ஒவ்வொன்றுக்கும் வானலோகத்தில் ஒரு பிரதிநிதி இருப்பதாகவும், பூலோக நாட்டின் கதியை அங்கே நிர்ணயிப்பதாகவும், அவர்கள் கற்பனை செய்துகொண்டனர் வான மண்டலத்திலே, கிரஹங்கள் ராஜாக்கள்! நட்சத்திரங்கள் மந்திரிகள்! வால் நட்சத்திரங்கள்தான் அரசியல் தூதுவர்கள்!! இப்போது சீனாவில் உள்ள கருத்து அல்ல இது, ஞானக்கண்ணினரின் ஆதிக்கத்தில் சீனா இருந்தபோது, மக்கள் நம்பி வந்த மார்க்க உண்மை இது. நாம் இன்றும் நம்பவேண்டும் என்று மடிசஞ்சிகள் மிரட்டுவதுபோல, சீனாவிலும் சரி, வேறு நாடுகளிலும் சரி, யாரும் மிரட்டுவதில்லை. பழைய கற்பனைகள் பலப்பல இருந்தன—அறிவொளி வீசும் வரை மக்களை மருட்டியும் வந்தன.

• • •

தூய்மைக்கோ வாய்மைக்கோ துளியும் இடந்தராத இந்தமார்க்கங்களைக் காப்பாற்றத் தமது உயிரையும் இழக்க, அந்த நாளில் மக்கள், கிளம்பினர், இவைகளைப் பற்றிச்சிறிதளவு சந்தேகம் கொண்டவர்களையும் சித்திரவதை செய்தனர்—ஆண்டவனின் சித்தத்தை அறிந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். எனினும், இன்று, அந்த மார்க்கங்கள் மங்கி மடிந்தே போயின!

கற்பனைக் கதைகளின் மீதுதான் கடவுட் கொள்கை கட்டப்படவேண்டும், என்ற எண்ணமே, இன்று, அறிவுலகில் எள்ளிநகையாடப்படும் அளவுக்கு, மக்கள் உள்ளம் பண்பட்டிருக்கிறது. விசித்திரமான உருவங்கள், விபரீதமான செயல்கள், இருந்தாக வேண்டும், தெய்வத்துக்கு என்ற எண்ணம் முறியடிக்கப்பட்டு விட்டது. பழைய கற்பனைக் கதைகளை, மனித சமுதாயத்தின் குழந்தைப்பருவப் பிதற்றல்கள் என்று, ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

வானத்திலே உலவும், மேகங்கள், மின்னும் நட்சத்திரங்கள், ஒளியை அள்ளித் தரும் நிலவு, போன்றவைகள் குழந்தையின் உள்ளத்திலே, எத்தனையோ விதவிதமான எண்ணங்களை எழுப்புகின்றன! மழலை மொழியிலே ஏதேதோ கூறுகிறது. மனித சமுதாயத்தின் குழந்தைப் பருவத்திலே, இதே நிலைதான்.

மழலைகேட்டு இன்புறும் தாய், குழந்தை வாலிபனான பிறகும், "சந்த மாமாவைப் பிடித்துத்தா!" என்று கேட்டால், மகிழ முடியுமா? மருள்வாள் தாய்; மகனுக்கு ஏதோ மனமருள் என்று! அதுபோலத்தான், மனித சமுதாயம், முறுக்கேறிய வாலிபப் பருவ நிலை பெற்றிருக்கும் இந்நாளிலே, குழந்தைப் பருவத்துக் கதைகளை, கற்பனைகளை, கூறிக்கொண்டும், நம்பிக்கொண்டும், அந்த நம்பிக்கையையே அடிப்படையாகக்கொண்டு, வாழ்க்கையை அமைத்துக் கொண்டும், அப்படிப்பட்ட வாழ்க்கைதான், ஆஸ்திகம், என்று பேசிக்கொண்டும், அதனைச் சந்தேகிப்பது, பாபம் என்று மிரட்டிக் கொண்டும் இருந்தால், மகிழ்ச்சியா பிறக்கும் மதியுள்ளவர்களுக்கு!

ஞானக் கண்ணினர் கூறினர், அருளாளர்கள் செப்பினர், அவதார புருஷர்கள் கூறினர், என்று சமாதானம் சொல்லிவிட்டால் போதுமா? இவன் யார்? துஷ்டன்! துராத்மா!—என்று தூற்றிவிட்டால், போதுமா?

விஞ்ஞானக் கண்ணினர், கண்டறிந்து உண்மைகளைக் கூறினர், என்பது மட்டுமல்ல, கூப்பிடுகிறார்களே, ஞானக்கண்ணினரின் பரம்பரையில் வந்தவர்கள் நாங்கள் என்றுபேசுபவர்களை, "மடிசஞ்சியே! வா, வானிலை ஆராய்ச்சி மாடிக்கு! உனக்குக் காட்டுகிறேன், இயற்கையின் அழகொளியை!" என்று அழைக்கிறார்களே! மடிசஞ்சியால் முடிகிறதா—ஆயிரம் தலை கொண்ட ஆதிசேஷனின், ஒரு தலையையாவது, அவர்களுக்குக் காட்ட; நமக்குக் காட்ட வேண்டாம், நாம் சாமான்யப் 'பிரகிருதிகள்' மகா மேதாவிகள், ஞானஸ்தான், வேத அத்யயன விற்பன்னர்கள், உபநிஷத்தின் உட்பொருளை உணர்ந்தவர்கள், யாராவது ஏமாந்தவன் கிடைத்தால், "டே! நாக்கு அழுகிடும்! வாய்புழுத்து விடும்! விநாசகாலே விபரீத புத்தி!" என்றெல்லாம் பேசும் பிரம்ம சொரூபங்கள், உலகிலே, விஞ்ஞானக் கண்ணினரைக் கண்டு, அழைக்க வேண்டாமா, வாதுக்கு! குளத்தங்கரையோடு முடிந்துவிடுகிறதே இவர்களின் கூச்சல்!!

கொடைக் கானலிலே, இருக்கிறது சர்க்காரின்வானிலை ஆராய்ச்சி நிலயம்—பெருஞ்செலவில்நடத்தப்படுகிறது. அங்கே போய்க் கூடவேண்டாமா, நாலு வேதங்களையும் புராண இதிகாசாதிகளையும் துணைக்கு அழைத்துக் கொண்டு! போய் அறைகூவி அழைத்துக் கேட்க வேண்டாமா, "ஏ! என்னதப்பா அது, நீளமான இரும்புக் குழாய்?" என்று.

"இது டெலஸ்கோப்!" என்பானே விஞ்ஞானி!

உடனே, எட்டைப் பிரித்துப் பார்த்தால், அந்தப் பதமே இராது! உடனே உக்ரத்துடன் கேட்க வேண்டும், "என்ன, கோப், அது, இன்னொருதடவை சொல்லு?" என்று, அவன், மறுமடியும் தெளிவாகக் கூறுவான், "இது டெலஸ்கோப்! இதன் மூலம் நான் வானிலையை ஆராய்கிறேன்" என்று. பிறகு, தைரியமிருந்தால், அந்த டெலஸ்கோப் மூலம், தேடிப்பார்த்தாவது, கண்டு பிடிக்கட்டுமே, நாரதரையோ, நந்தியையோ, அவருடைய தம்பூரரையோ, இவருடைய மிருதங்கத்தையோ, காமதேனுவின்காலையோ, ரிஷபத்தின் வாலையோ, ரம்பையின் சேலையையோ, எதையோ ஒன்றையாவது கண்டுபிடித்துக் காட்டட்டுமே பார்ப்போம்!

விஞ்ஞானி, ஆராய்ச்சியின் துணைகொண்டு கண்டுபிடித்துக் கூறும் உண்மைகளை மறுப்பதற்குத் தங்களுடைய ஊத்த குரலும், உளறல் முறையும், உருட்டலும் மிரட்டலும்மட்டுமே போதும் என்று நம்பும் இந்த 'உயர்ந்தவர்கள்' உலகிலே, மற்ற இடங்களிலே, இவர்கள் இன்றும் கூறும் கதைகளையும் கற்பனைகளையும், கடந்து, சென்றுவிட்டனர், என்பதை உணரவேண்டும். இவர்கள் கூறும் விதமான 'ஞானக்கண்ணினர்,' பல நாடுகளிலும் இருந்தனர்—அந்த நாட்களிலே, பாமரரின் கருத்து மலராதிருந்த நாட்களில்—இன்று, விஞ்ஞானக் கண்ணினர், உண்மையை உலகுக்கு அறிவிக்கத் தொடங்கிவிட்டனர். ஞானக் கண்ணினரின் கருத்துக்கும் கற்பனைக்கும் கூட எட்டாதிருந்த உண்மைகளைக் கண்டறிந்தாகி விட்டது.

விஞ்ஞானிகள் புது உண்மைகளை எடுத்துக்கூறியபோது, பல்வேறு நாடுகளிலேயும், பகை புகைந்தது, கொடுமை தாண்டவமாடிற்று, அடக்குமுறை தலைவிரித்தாடிற்று—கல்லாலடித்தனர் கண்ணைத்

தோண்டினர் — நாக்கை அறுத்தனர்— நாடு கடத்தினர்—தீயிட்டனர்—கழுவேற்றினர்!

எல்லாவிதமான துன்பங்களையும், பொறுத்துக்கொண்டு, உண்மையை உரைத்தே தீருவோம், என்று உறுதியுடன்உத்தமர்கள் சிலர் இருந்ததால்தான் விஞ்ஞான உண்மைகள் வெற்றிபெற்றன! விஞ்ஞானிகள்பட்ட கஷ்டங்களையும், மதவாதிகள் அவர்களுக்கு இழைத்த கொடுமைகளையும், படித்துப் பார்க்கும்போது, அந்தக் கொடுமைகளை இழைக்கக் கோல் கொண்டவர்கள், ஜெபமாலை கொண்டவர்களின் துணைவர்களாகி இருந்ததை அறியும்போது, எந்த மக்களின் நன்மைக்காக, விஞ்ஞானிகள் அந்தப் புது உண்மைகளை அறிந்து உரைத்தனரோ, அவர்களையே அதே மக்கள் சித்திரவதை செய்ய முன் வந்தனர் என்பதையும் அறியும்போது, இன்று இங்கு, புராண இதிகாசங்களிலே உள்ள நிலைமையின், நீதிகளை, கொள்கைகளை, கற்பனைகளை, தாக்கும் நம்மை, இந்த மடிசஞ்சிகளும் அவர்களின் அடிவருடிகளும், தூற்றுவது, மலர் தூவுவதற்குச்சமம், என்றே தோன்றுகிறது. அவ்வளவு அரும்பாடுபட்டிருக்கிறார்கள் விஞ்ஞானிகள், ஒரு நூற்றாண்டுக்கு முன்பு வரையிலும்!

விஞ்ஞானிகள் பலர், வரிசை வரிசையாகத் தோன்றியவண்ணம், பணி புரிந்த வண்ணம், இருந்த நாடுகளிலேயே, மத ஆதிக்கக்காரர்களின் கொட்டம், ஒரு நூற்றாண்டுக்கு முன்புவரையில், கொழுத்து இருந்ததென்றால், சவுண்டிகளின் சகாப்தமே முடிவுபெறாத நிலையில் உள்ள,நமது நாட்டிலே விஞ்ஞான உண்மைகளை எடுத்துக்கூறுபவனுக்கு ஏற்படும் கஷ்டங்களையும் ஆபத்துகளையும், அவன்மீது சுமத்தப்படும் இழிவுகளையும் பழிகளையும், கண்டு, கலக்கமடையவோ, ஆச்சரியமடையவோ, காரணமில்லை! வயலுக்கு மாடு ஓட்டிக் கொண்டு செல்லும் கந்தன், இன்னமும், எமன் ஏறிச்செல்லும் வாகனம், எருமை தான், என்று திடமாகநம்புகிறான்,அவனை 'மடிசஞ்சி' ஆட்சி செய்வதிலே, என்ன ஆச்சரியம்! மடிசஞ்சியும் அந்த மந்தபுத்தியும்கூடிக்கொண்டு, புதியஉண்மையைக் கூறுபவன்மீது கல்லையும் சொல்லையும் வீசுவதிலேதான், என்ன ஆச்சரியம் இருக்கமுடியும்!

"என்ன சொன்னான், என்ன சொன்னான்,அந்தத்தூர்த்தன்! உலகம்உருண்டை என்றா சொன்னான்? மக்களிடம்! மார்தட்டிப்பேசினானா? மடையனைப் பிடித்து இழுத்துவாருங்கள் இப்படி" என்றுதான் குருமார்கள் கூவினர்— கொக்கரித்தனர். கொடுமையான சட்டங்களைப் பிறப்பித்தனர்!—ஐரோப்பாவில்— முன்பு. ஆனால் இறுதிவெற்றி, இரைச்சலிட்ட இறுமாப்பாளருக்கு அல்ல! சகித்துக்கொண்டசீலர்களுக்குக் கிடைத்தது! இரத்தத்தைச் சிந்திய இலட்சியவாதிகளுக்குக் கிடைத்தது.

உலகில், ஆதிநாட்களிலே, ஏற்பட்ட எல்லாமார்க்க ஏடுகளிலும், குறிப்பிட்டிருப்பதற்கு, நேர்மாறான,விஷயங்களைத் தான்—உலகைப்பற்றி—உலக உற்பவத்தைப்பற்றி—கடலைப்பற்றி — காற்றைக் குறித்து—நீரைப்பற்றி நெருப்பைப்பற்றி —விண்ணைப்பற்றி மண்ணைப்பற்றி,இயற்கையின் பலவகையான கோலங்களைப் பற்றி எல்லாம், உலகிலே உள்ளவர் அனைவரும், இன்று படிக்கின்றனர் — அந்தப் படிப்புத்தான் கல்வியாக இருக்கிறது. ஞானக்கண்ணினர் கூறின உண்மைகள்; இன்று பஜனைமடங்களில் பதுங்கிக் கொண்டும், மடிசஞ்சி, மணிஉருட்டி,மந்தபுத்தி; மன்னார்சாமி, ஆகியோரிடம்தவிர, வேறு இடம் புகமுடியாத நிலை பெற்று விட்டன! இந்த மகத்தான வெற்றியைக் கண்டு, மானரோஷத்தில் அக்கறை துளியாவது, 'லவலேசமாவது' இருந்தால், முக்காடிட்டுத் திரிய வேண்டும், முணுமுணுப்பாளர்கள்.

✻

## டில்லி தேவதைக்கு!

"எங்கள் சமஸ்தானம், இந்தியாவிலே உள்ள மற்ற எல்லாச் சமஸ்தானங்களைக் காட்டிலும், மக்களின் வசதிகளைக் கவனிப்பதில் முன்னணியிலிருக்கிறது. இங்கு ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது—மருத்துவ நிலையங்கள் பல; போக்குவரத்துச் சாதனமும் மிக அதிகம்; இவ்வளவு முற்போக்கான நிலையை, நீடித்துவைத்திருக்க வேண்டும்; மேலும் பலநலன்களைக் கவனிக்க வேண்டும்; பணச்செலவு அதிகம்பிடிக்கும். இந்நிலையில்,சமஸ்தானத்திலிருந்து மத்திய சர்க்கார், முக்கியமான,வளமானவரியை எடுத்துக்கொண்டு அதிலிருந்து ஒரு சிறு பாகத்தைமட்டுமே, சமஸ்தானத்துக்குக் கொடுத்தால், போதாது. சமஸ்தானத்திலே இப்போதுள்ள 'தரம்' கெடாதபடியான அளவு பணம் மத்யசர்க்காரிடமிருந்து எங்களுக்குக்கிடைக்கவேண்டும். மத்திய சர்க்காரிலே இணைந்ததால், ஏற்கனவே இருந்துவரும் சுகமும் போயிற்றே, என்று மக்கள் வாடும்படியாக நிலையைச் செய்துவிடக் கூடாது. ஆகவே மத்யசர்க்கார், அதிகமான அளவு பணம் தரவேண்டும்" என்று கொச்சி சமஸ்தானத்தின் நிதிமந்திரிதோழர் P. கோவிந்த மேனன், நவம்பர் 11ந்தேதி பத்திரிகை நிருபருக்குக்கூறினார்.

"வருமானவரி, சுங்கவரி, புகையிலைவரி போன்ற, வளமான வரிவகைகள், மத்ய சர்க்காருக்குச் சேர்ந்துவிடும் என்று அரசியல் திட்டம் கூறுகிறது. இந்த வரிகள் மூலம் சுமார் 3 கோடி ரூபாய் இப்போது கிடைக்கிறது. இதைக்கொண்டுதான், எங்கள் சமஸ்தானத்தில் முற்போக்கான பல காரியங்களைச் செய்யமுடிகிறது. இனி, இந்தப்பணத்தைமத்ய சர்க்காருக்குக் கொடுத்துவிட்டு, அதில் ஒருபகுதி மட்டுமே திருப்பி, பங்காகப் பெறுவது என்ற ஏற்பாட்டுக்குச் சமஸ்தானம் இணங்கினால், சமஸ்தானத்தில் மக்களுக்குத் தேவையான, முற்போக்கான நன்மைகளைச் செய்ய,வழி ஏற்படாது. நிர்வாகம் ஒழுங்காக நடைபெறாது. மக்களுக்குச் சுகம் ஏற்படாது. எனவே, மத்திய சர்க்கார் வருமான வரி போன்றவைகளைப் பெற்றுக் கொள்ளும் முறை கூடாது. அந்த வரிகள் சமஸ்தானத்துக்கே சேரவேண்டும்" என்று திருவாங்கூர்சர்க்கார், ஓர் அறிக்கை தயாரித்து டில்லிக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

✻

## மந்திரிகள் மணிமொழிகள்

"மகாஜனங்களே! புதிய தொழில்களை நீங்கள்தான் துவக்கவேண்டும் —பணம் போட்டு. சர்க்கார் இந்தக் காரியத்தைச் செய்யும் என்று எண்ணாதீர். சர்க்காரால் முடியாது— போதுமான பணம் இல்லை, சர்க்காரிடம்."

சீதாராமரெட்டி,
கள்ளிக்கோட்டை
13-11-48.

* * *

"மாகாணத்தில், வீடுகட்டித் தரும் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானால் 1200 கோடி ரூபாய் வேண்டும். நல்ல தண்ணீர் கிடைக்கும்படி செய்யவும், சாக்கடை கட்டும் திட்டத்தை நிறைவேற்றவும் 10·) கோடி ரூபாய் வேண்டும், உணவுப் பொருளின் தரத்தை உயர்த்தவும், பணம் வேண்டும். என்ன செய்வது! சர்க்காரிடம் பணம் இல்லை! ஆகவே இந்தத் திட்டங்கள் எதையும் அமுலுக்குக் கொண்டுவருவதற்கில்லை."

அமைச்சர்
A. B செட்டி
சென்னை. 8-11-48

## தற்காலக் கவிஞர்

4-ம் பக்கத் தொடர்ச்சி

தைக் கூட்டுகிறார். உலகம் என்று சொல்லப்படும் தொன்று தொட்டு இருந்துவரும் பழைய முதலாளியைக் கூண்டிலே நிற்கவைத்துக் கேள்விகள் கேட்கிறார். உன்னிடத்திலுள்ள நஞ்செய், புஞ்செய் ஆகிய நிலங்களை எல்லாம் முன்பொரு காலத்தில் எல்லா மக்களுக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்தாயா? என்று கேட்கிறார் கவிஞர். ஆமாம் என்கிறான் உலகப்பன். வாய்ச்சொல்லின் பேரில் கொடுத்தாயா அல்லது சீட்டு எழுதி வாங்கிக்கொண்டு கொடுத்தாயா? என்று கேட்கிறார். வாய்ச்சொல்லின் பேரில் தான் கொடுத்தேன் என்கிறான் உலகப்பன். நீ அன்று குறித்துக்கொடுத்தபடியே உள்ளனவா நிலங்களெல்லாம்? என்று வினவுகிறார். இல்லை; கையாடியும் வாயாடியும் சேர்த்துக்கொண்டு கண்மூடி மக்களது நிலத்தையெல்லாம் பிடுங்கிக்கொண்டு ஏமாற்றி வந்தார்கள்; அதனால் கூலிமக்கள் பெருகினார்கள்; பணக்காரர்கள் நீர் நிறைந்த தொட்டியைப்போல் பணம் நிரப்பினார்கள்; ஏழைகள் பொத்தலையுடைய குடத்தைப்போலத்தங்களிடமுள்ளவற்றை யெல்லாம் பறிகொடுத்து வந்தார்கள்.

புரட்சிக் கருத்துக்களைக் கலை என்னும் ஆயுதங்கொண்டு பாரதிதாசன் பயன்படுத்திய அளவுக்கு வேறு எந்த கவிஞரும் பயன்படுத்த முயன்றதில்லை. அவர் அரண்மனைகளிலும், மாடமாளிகையிலும், ஆண்டவன் கோயில்களில் மட்டுமே உலாவிக்கொண்டிருக்கும் புலவரல்லர். அவர் பெரும்பாலும் உழைப்போர் இல்லங்களிலும், ஏழைகளின் வீதிகளிலும், வறியோர் வாழுமிடங்களிலும், பகுத்தறிவு மன்றங்களிலும், இயற்கைக் காட்சி நிறைந்த மலை, ஆறு, கடல், காடுகளிலும் சுற்றித்திரிந்து தம் உள்ளத்தை அவற்றின் மீது குழைந்து சென்று வரச்செய்வார். அவர் அரண்மனைகளிலும், ஆண்டவன் கோயிலிலும் நுழைவது உண்டு, அங்கிருக்கும் ஆசாபாசங்களை நாட்டு மக்களின் முன் எடுத்துவைக்க வேண்டி. அவர் இயற்றியுள்ள இசையமுது என்ற நூலைப்பார்த்தால் பாடற்குரிய பொருள்களாகக் கொள்ளப்பட்டவர்கள் வண்டி ஓட்டுபவன், மாடு மேய்ப்பவன், ஆலைத்தொழிலாளி, ஆடைநெய்பவன், கோடரிக்காரன் என்ற இத்தன்மையோராகவே இருக்கக் காணலாம்.

பெண்களின் உயர்வு குறித்தும், அவர்களுக்கு நீதி வழங்கவேண்டிய அவசியம் குறித்தும், அவர்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் களையப்பட வேண்டும் என்ற நோக்கங் கொண்டும் பல கவிதைகள் இயற்றியுள்ளார். கணவன் இறந்த பிறகு இளம்பெண் விதவையாக வைக்கப்பட்டு இழைக்கப்படும் கொடுமையை வன்மையாகக் கண்டிக்கிறார். பெருங்கிழவன் மனைவி இறந்துவிட்டால் இளம்பெண்ணை மணம் செய்துகொள்ள விரும்புகிறான்; ஆனால் கணவன் இறந்துவிட்டால் மங்கை நல்லாள் மணம் செய்துகொள்ள மறுக்கப் படுகிறாள். "பாடாத் தேனீ, வீசாத்தென்றல், பசியா நல்வயிறு பார்த்ததுண்டோ" என்று கேட்டுப் பெண்களின் பரிதாபநிலையை விளக்குகிறார்.

பாரதிதாசன் பாடல்களிலே காதல் சுவையைக் காணலாமே யொழியச், காமச்சுவையையாண்டும் காணமுடியாது. அவர் இயற்றியுள்ள காதற் பாட்டுகள் மிகமிக உயர்ந்த தன்மை வாய்ந்தன என்பதைப் பலரும் ஒப்புக்கொள்ளக் காண்கிறோம். "காதல் நினைவுகள்" என்ற நூலிலே காதற் பாட்டுகள் அழகுற அமைந்துள்ளன.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் வெறும் ஆவேசக்கவி என்று மட்டும் எண்ணாதீர்கள். சீர்திருத்தக் கருத்துக்களடங்கிய பாடல்கள் மட்டுமே அவரால் பாடமுடியும் என்றும் கருதாதீர்கள். தமிழைப் பற்றியும், இயற்கையைப் பற்றியும் அவர் இயற்றியுள்ள கவிதைகள் நெஞ்சை அள்ளுகின்றன. தமிழின் சிறப்பைக் கூறவந்த பலரும் பலவிதமாகப் போற்றிப் புகழ்ந்தார்கள். செந்தமிழ் என்றும், பைந்தமிழ் என்றும், தண்டமிழ் என்றும், தீந்தமிழ் என்றும், தேன்தமிழ் என்றும், முத்தமிழ் என்றும், முதுதமிழ் என்றும், இனிய தமிழ் என்றும், ஒப்பிலாத் தமிழ் என்றும் பலபடப் புகழ்ந்துள்ளார்கள். கம்பன்கூட "என்றுமுள தென்றமிழ்" என்றான். "தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங் காணோம்" என்றார் பாரதியார். அவர்கள் எல்லோரையும்விட ஒருபடி மேலே சென்று நிற்கிறார் கவிஞர் பாரதிதாசன். "மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழுக்கு ஈடில்லை என்றுரைப்போம்" என்று இன்பத்தின் உச்சநிலையில் நின்று கூறுகிறார்.

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்று முழக்குகிறார். "தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன், எதிரிகள் கோடியிட்டு அழைத்தாலும் தொடேன்" என்று சூளுரை கூறுகிறார். இவ்வாறு தமிழைப் பற்றியும், தமிழரைப் பற்றியும் பல அரிய கவிதைகளைத் திறம்படப் பாடியுள்ளார்.

கவிதையோடு குழைத்து ஊட்டப்படும் எந்தக் கருத்தையும் மக்கள் ஏற்றுக்கொண்டே தீருவார்கள். ஆகவே அந்த அருமையான ஆயுதத்தைப் பகுத்தறிவு வாதிகள் உபயோகிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். அப்படியாவதற்கு ஒவ்வொரு கலையார்வமுள்ள மாணவரும் பாரதிதாசனின் உள்ளத்தைப்பெறவேண்டும்.

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது, சிறுத்தையே வெளியில் வா" என்று மாணவர்களாகிய உங்களைப் பார்த்துக் கவிஞர் அழைக்கிறார்; நயவஞ்சகர்களைத் துரத்தி யடிக்க—நல்லாட்சி அமைக்க—நன்மொழிக்கு விடுதலை நல்கிட, "வாழ்க இளைஞனே, வாழ்க நின் கூட்டம், வாழ்க திராவிட நாடு; வாழ்கநின் வையத்து மாப்புகழ் நன்றே!"

*

## கதர்

*

சென்னை சர்க்கார், கதர் உற்பத்தியை அதிகமாக்குவதற்காகத்திட்டமிட்டு வேலை செய்கிறதல்லவா?—அதன் இலட்சணம், எப்படி இருக்கிறது? இதோ, சர்க்காரே வெளியிடும் தகவல்.

1946—47—ஆகிய ஓராண்டில் சர்க்கார், திட்டமிட்டு வேலை செய்யும் 7 இடங்களிலும் மொத்தம்,

6,40,149, கெஜம் கதர் உற்பத்தி செய்யப்பட்டது.

இதிலே,

3,35,000 கெஜம் விற்பனையாகமல், மூட்டை கட்டி மூலையில் போடப்பட்டிருக்கிறது!

எப்படி, இலட்சணம்!

# கலையும் படுகொலையும்!

★

**பதினாறு பேரைக் கொன்ற பாதகன் இவன்!**

**விஷமிட்டுக் கொன்றான், பதினாறு பேர்களை!**

**பணத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு போனான், பதினாறு பேர்களைப் பிணமாக்கிவிட்டு!**

* * *

*கோர்ட்டார் கூறினர் இதுபோல். —கொலை பாதகன், அந்தக் குற்றச்சாட்டை மறுக்கவில்லை.*

* * *

**உண்மை! பதினாறு பேர்களை விஷமிட்டுக் கொன்றது உண்மை!**

**பணத்தைக் கொள்ளை அடித்துக் கொண்டு போனேன் என்பதும் உண்மை!**

**ஆனால், நான், பாதகன், படுகொலை புரிந்தவன், என்று மட்டும் கூறிவிடாதீர்கள்! நான் ஓர் கலைஞன், கொலைஞன் மட்டுமல்ல! படுகொலை செய்தேன், ஆனால் பிணமாகி அந்தப் பதினாறு பேர்களும் கீழே வீழ்ந்தபோது, நான் கொலைகாரனாக மட்டுமில்லை, பக்திமானும் ஆனேன், இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுமென்று பிரார்த்தித்தேன்.**

**நான் கொலைஞனானேன், கலைஞனாக வாழ்வதற்கு! காதலைப் பெறுவதற்கு! படுகொலை செய்த பிறகும், பிரார்த்திக்கத் தவறவில்லை.**

*என்று கூறினான் குற்றவாளி. 58 பக்கங்கள் கொண்ட ஒரு வாக்குமூலத்தையும் கொடுத்தானும்.*

*மிராசாவா—இந்தக் கொலைகாரன் பெயர். டோக்கியோவிலே உள்ள பாங்க் ஒன்றில், இவன், சுகாதார இன்ஸ்பெக்டர்போல் வேஷமிட்டுக் கொண்டு சென்றான். ஊரிலே, வயிற்றுப்போக்கு வியாதி இருப்பதாகவும், அதற்காகத் தடுப்பு மருந்து தர வந்திருப்பதாகவும் கூறி, அங்கு பணியாற்றிவந்த பதினாறு கிளார்க்குகளுக்கும், விஷத்தை, மருந்தெனக் கொடுத்தான். சாவதானமாக, துளியும் பதைப்பின்றி, விஷத்தைக் கொடுத்துவிட்டு, பதினாறு பிணங்கள் கீழே சாய்ந்தபிறகு, அவர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுமென்று ஆண்டவனுக்குக் கூறிவிட்டு, அகப்பட்ட பணத்தைச் சுருட்டிக் கொண்டு ஓடிவிட்டான். பிடிபட்டுக் கோர்ட்டில் நிற்கவைக்கப்பட்ட பிறகு, குற்றத்தை ஒப்புக்கொண்டதுடன், "நான் கலைஞன்!" என்று கூறினான்.*

*டோக்கியோவில் ஒரு ஓவியக் கழகமாம், அதற்கு இவன் தலைவனாம். கலை வளர்ச்சியில் அக்கறை கொண்ட அந்தக் கழகத்துக்குப் பணம் தேவைப்பட்டதாம்—இவன் பணம் தேடித்தரும் பொறுப்பை ஏற்றுக்கொண்டானாம்—கலை ஆர்வத்தால்! இவனுக்கும் பணம் தேவைப்பட்டது—அதுவும் சாமான்யமான காரியத்துக்கு அல்ல, காதலுக்காம்!! ஆகவே, கலைக்காகவும் காதலுக்காகவும் கொலை புரிந்தேன், என்று கூறினான் காதகன். செயல் குற்றமுடையதுதான், ஆனால், என் நோக்கத்தைப் பாருங்கள்—கலைக்காகச் செய்த கொலை இது என்பதைக் கவனியுங்கள்!—என்று கூறினான் மிராசாவா!! அக்டோபர் திங்களில், ஜப்பானில் நடைபெற்ற சம்பவம் இது. கலைக்காகக் கொலை!*

* * *

*இவ்வளவு பாதகமான காரியத்தை, யாரும், செய்யத் துணிவு கொள்ளமாட்டார்கள்—இவன் மிக மிகக் கடைந்தெடுத்த காதகன்—எனவேதான் செய்தான்—மிக மிக நெஞ்சழுத்தக்காரன், எனவேதான், கலைக்காகக் கொலை செய்தேன், என்று கூறவும் துணிந்தான்.*

* * *

*கலைக்காகக் கொலை செய்யலாமா, என்பதை அல்ல நாம் இங்கு பிரச்னையாகக் கொள்வது—கலைக்காக, எதையும் செய்யலாமா, கலையின் பேரால், எந்தக் காரியம் செய்தாலும், நியாயமானது என்று கருதலாமா, கலை நோக்கம்கொண்டு, இக்காரியம் செய்தேன், என்று, எதற்கும் கூறிவிடுவது, சரியா, என்பதைத்தான் எண்ணிப்பார்க்கவேண்டும் என்கிறோம். ஏனெனில் இங்கு யாரும், படுகொலையும் கொள்ளையும் நடத்திய இல்லை, கலைக்காக—ஆனால், வேறு பலப் பல, அறிவுக் கொலைகளும் சுயமரியாதையைச் சூறையாடுதலும் நடத்தி இருக்கிறார்கள், கலையின் பேரால்!*

*தாய்ப்பாலின்றி, வேறு வகையான பாலோ, பானமோ இன்றிச் சிறுகுழவி, இறந்துபடும் போது, முகத்திலே எத்தகைய வேதனைக் குறி இருக்கும் என்பதை ஓவியமாகத்தீட்டி, கலைத்திறனைக் காட்ட வேண்டுமென்று, உண்மையாகவே நோக்கம் கொண்டு, ஒரு கலைஞன், சிசுவைத் தாயிடமிருந்து திருடிச் சென்று, பாலோ பானமோ தராது, தனியிடத்தில் கிடத்தி, பக்கம்நின்று பார்த்து, தீட்டுக்கோலை வர்ணக் கலயத்தில் தோய்த்தெடுத்து, ஓவியம் வரைந்து, பிறகு, ஊர்மன்றத்தைக் கூட்டிவைத்து, கலை நுட்பம் அறிந்தோர் முன் ஓவியத்தைக் காட்டி, அனைவரும் ஆஹா! அருமை! அருமை! என்று புகழக்கேட்டு மகிழ்ந்து, கலைக்கோமான் என்று பட்டம் தரப்பட்டுச் சூட்டிக் கொண்டு, பிறகு, அவர்களுக்கு நன்றி கூறத் தொடங்கி, "இந்த ஓவியம் இவ்வளவு கலை நுட்பத்துடன் இருப்பதற்குக் காரணம் கூறுவேன் கேண்மின்! என்று துவக்கி, தான் செய்த சிசுக்கொலையைக் கூறினால், என்ன நேரிடும், கலைக்கோமான், என்ன கதியாவான்!!*

*கலைக்காக, எதையும் செய்யலாம்! —இந்த வாதத்தை அந்த ஜப்பானியக் கொலைகாரன் கூறினான், கொடிய செயல்புரிந்து. அதுபோன்ற படுகொலைகள் செய்யாவிட்டாலும், மக்களின் வாழ்வுக்கு விஷமூட்டும் செயலை, கலையின் பேரால் செய்தவர், இந்நாட்டில் உண்டு! கலைக்காக, இனத்தின் பண்புகளைப் படுகொலை செய்தவர்கள், இருக்கிறார்கள். கலை அழகு கூட்டியிருக்கிறேன் பாரீர் என்று கூறி, மக்களின் மதியை அழித்திருக்கிறார்கள்! அறிவைப் பழித்திருக்கிறார்கள்! கலைக்காக அறிவுக் கொலைபுரிந்தவர்களைப், போற்றிடும் கலாரசிகர்களும் உள்ளனர்!*

(16-ம் பக்கம் பார்க்க)

# அவர்கள் சிந்திப்பார்கள்

—✲—

முடிசார்ந்த மன்னர், மும்மலங்களையும் கடந்த முனிவர், தீமை பல புரிந்த தூர்த்தர், எவராயினும் முடிவில் ஒரு பிடி சாம்பலாவதைக் காணும் எவரும், பற்பல தூய எண்ணங்களைக் கொள்ளுகின்றனர். இதற்கா—இந்த மண்ணோடு மண்ணாவதற்கா—சொந்த வாழ்விற்காக, பலரின் வாழ்வைக் கெடுத்தோம், பஞ்சமா பாதகங்களையும் மனமொப்பிச் செய்தோம், என்று சென்ற நாளில், தாம் ஆற்றிய வினைகளுக்காக வேதனைப்படுகிறார்கள். மயானத்தில், பலரறிய வாழ்ந்த படாடோப வாழ்வினரும், பசி பசி என்று பிட்சாபாத்திர மேந்திப் பசி தணியாது தவித்து வாடும் பஞ்சையும், முடிவில் மண்ணில்தான் கலந்துவிடுகிறார்கள் என்னும் சூட்சமத்தைத் தெரிந்துகொள்ளுகிற பொழுது, முன்னாள் தாம் கொண்ட கோலத்தினைக் கைவிட்டு, அனைவரிடமும் அன்புகொண்டு, மற்றவர்கள் நலத்திற்கும் நற்பணி பல புரிவதென்று, தீர்மானித்துக் கொள்ளுகிறார்கள். எவ்வளவு நேரம் இது-இந்த உயர்ந்த போக்கு—அவர்களிடம் நீடித்து நிற்கிறது? இந்தத் தெளிந்த நிலை, சில பல நிமிஷங்களுக்குள் மாறிவிடுகிறது. பிணத்தைக் கண்டதால் ஏற்பட்ட மனமாற்றம் நீடித்து நிலையாக நிற்கவில்லை. பிணம் கண்ணைவிட்டு மறைந்ததும், வீட்டின் நினைப்பும், சொந்த வாழ்வின் எண்ணமும் மனத்தைக் கவ்விக்கொள்ளுகிறது. மனைவியும் மக்களும், மற்றுமுள்ள சுற்றத்தார்கள் நிலையும், கண்களில் பட்டதும் சுயநன்மையும் அத்துடன் சேர்ந்துகொண்டு, மயானத்தில்கற்ற கல்வியை மறந்துவிடச் செய்கிறது. பழையபடியே, என்றுமுள்ளது போல், வாழ்க்கைப் போராட்டத்தில், வஞ்சனையை வாளாகக் கொண்டு, சுயநலத்தைக் கேடயமாக ஆக்கி, ஏமாந்தோரை ஏய்த்து, எதிர்த்தோரை வீழ்த்தி, வாழ்வில் வளந்தேட வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது.

மயான வைராக்கியம், மக்களிடத்தில் என்றும் நிலையாக இருந்து, மனிதப்பண்பு வளரவேண்டுமானால், அதற்கான முறையில், அமைப்பை, சமூக அடிப்படையை மாற்றி அமைத்தாக வேண்டும். இந்த ஆரம்ப வேலை வெற்றிகரமாக நிறைவேற்றப்படாமல், இன்றுள்ள சமுதாய அமைப்பால் ஏற்படும் விளைவுகளைக் கண்டு அஞ்சி, அதனிடம் அருவருப்புக்கொண்டு, நல்ல பண்புகளைத் திறமையான சொற்பொழிவாற்றி விடுவதால் மட்டும் சாதித்துக்கொள்ளலாம் என்று எண்ணுவது, ஏமாற்ற முடிவையே கொடுக்கும். ஆனால், தூய பண்புகளை உபதேசிக்கும் ஆற்றல் உடையவர்கள், தூய வாழ்வினராகவும், தூய உள்ளத்தினராகவும் இருந்துவிடுவார்களானால், அத்தகையவர்களிடத்தில் மக்கள் அன்புகொள்வதும், பற்றுதல் இருப்பதாகக் கூறித் திருப்திபடுவதும், ஆனால் அவர்கள் உபதேசங்களை அப்படியே மேற்கொள்ள முடியாமல், பெருமூச்சு விட்டுக்கொண்டு, 'அவர் காட்டிய வழி செல்ல நம்போன்ற சாதாரணமானவர்களால் முடிகிற காரியங்களா' என்று இயலாமைக்கு இலக்கணம் கூறிக்கொண்டு, என்றும் போல் இருந்துவிடுகிறார்கள்.

புத்தர் பிறந்தார், அரச பதவியைத் துறந்தார், தூயவாழ்விற்கு வழி வகுத்தார், அவர் ஓர் அவதாரம் என்று குறிக்கப்பட்டார். கடவுள் வரிசையில் வைக்கப்பட்டார். மக்களின் பூஜைக்குரியவரானார். விழாச் சிறப்புகள் நடைபெறுகின்றன. சிலர், அவர் போதனைகளை, நற்கருத்துக்களை, நாட்டினருக்குக் கூறி வாழ்க்கையை வசதியானதாக ஆக்கிக்கொண்டுள்ளனர். ஆனால்மக்கள்நிலை, புத்தர் பிறந்ததற்கு முன்பிருந்த அதே நிலைதான்!

இயேசு தோன்றினார்; இதோபதேசம் பல செய்தார். இவ்வுலகில் இன்பபுரி அமைக்க முயன்றார். தம் முயிரையே அர்ப்பணிக்கும் அளவிற்குக் கொல்லா நோன்பை மேற்கொண்டார். இரத்தம் சிந்தினார். மக்கள் பலர் அவர் பாதையைப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளப்படுகிறது. ஆனால் அவர் இலட்சியம் நிறைவேற்றப்படவில்லை! மக்களால், அவர் சொற்களை மேற்கொண்டு, அவ்வழி செயலாற்ற முடியவில்லை! வாழ்க்கைப் போராட்டம் இயேசுவின் அன்பு மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற தங்களைப் பெருமையாகக் கூறிக்கொண்ட போதிலும்,

(2-ம் பக்கம் பார்க்க)

விரைவில் வெளிவருகிறது!

சி. என். ஏ. எழுதிய

"வாழ்க்கைப் புயல்"

விலை: 0—12—0

சூதாடி, கள்ளன், கைதி, விபசாரி
முதலிய சிறு கதைகள் கொண்ட ஏடு!

டிம்மி அளவில் 56-பக்கங்கள் கொண்டது

சி. என். ஏ. எழுதிய

" சிந்தனை விருந்து "

சிந்தனைக்கும் கருத்து வளர்ச்சிக்கும்
ஏற்ற சம்பவங்கள் கொண்டது.

32-பக்கங்கள். விலை: 0—4—0

கிடைக்கும் இடம்:—

பரிமளம் பதிப்பகம்
54. வரகுவாசல் தெரு
காஞ்சிபுரம்.

14-ம் பக்கத் தொடர்ச்சி

இதென்ன படமய்யா, காணச் சகிக்கவில்லையே! நிர்வாணக்கோலத்தில் மங்கையர்! அவர்களைக்கண்டு குழலூதும் ஆடவன்!—இப்படி ஏன் ஓவியம் தீட்டினீர். காணும் ஆடவரும் பெண்டிரும், என்ன மனநிலை கொள்வர் என்று கேட்டால், உடனே "கருத்தறியாதானே! கலை உணராதோனே! நீ அறியாய் இதிலுள்ள கலை நுட்பத்தை! இது காமாந்தகாரத்தை மூட்டும் என்று எண்ணுகிறாய்! இது தீட்டப்பட்டதன் நோக்கம் இஃதல்ல! கலைக்காக! கலை அழகுகாட்ட!—என்று பதில் வந்து, தாக்கும்.

சரசலீலைகள், ஆபாச நடவடிக்கைகள், இவைகளைக், கல்லுருவங்களாக்கிக், கோயில்களிலே, கோபுரம், பிராகாரம், மண்டபம், ஆகிய இடங்களில் அமைத்துள்ளனர். தூய்மையைப் பெறச்செல்லும் இடத்தில், இத்தகு காமக்கூத்தின் ஆபாசங்கள் இருக்கலாமா? என்று கேட்டால், "சிறுமதியாளனே! சிற்பக் கலையின் சிறப்பினை அறியாது இதனைச் செப்புகிறாய்! கல்தான் அது! கரத்தில் சிறு உளிகொண்டுதான் செதுக்கினான் இதனை! ஆனால் பாரடா, 'பாவம்' எப்படி இருக்கிறது! பிரசவவேதனைப்படும் தாயின் முகம்—அதோ தெரிகிறதுபார்!—என்று கூறி, கலைக்காகடா தம்பி! கலைக்காக, இது!—என்று கூறுவர்—கோபமும் கொள்வர்.

பாட்டும் கதைப்போக்கும், வீட்டுக்கு ஏற்றதாக இல்லையே, பக்திக்கு ஏற்றதாகவோ, நற்பண்புக்கு வழி செய்வதாகவோ காணோமே? இப்படி ஒரு காவியமா? —என்று கேட்டாலோ, கடுங்கோபம் பிறந்துவிடும் கலாரசிகர்களுக்கு, "கதை பிடிக்கவில்லையா? தள்ளிவிடு! அதிலுள்ள மார்க்க போதனை பிடிக்கவில்லையா? தள்ளிவிடு! அதிலே உள்ள கலையைப்பாரடா, கலையை! நம்ப முடியாததாக இருந்தாலும்—அந்தக்கதையைப்படி — கலைக்காக! மார்க்க போதனை மதிவழி இல்லை என்றாலும், படி, —கலைக்காக!—" என்று கூறுகிறார்கள்.

கலைக்காக, அறிவுக் கொலையைச் செய்திருக்கிறார்கள், அதனைக் கலையின் பெயர் கூறி இன்றும் சிலர் ஆதரித்தும் வருகிறார்கள்.

டோக்கியோவில், கலைக்காகக் கொலை செய்தான் ஒரு கலைஞன்! வழக்கு மன்றத்தினர் அவனைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்தனர். இங்கு கலையின் பேரால் அறிவுக் கொலை செய்தவர்களை, அந்தக் 'கலையை'ப் பரப்புபவர்களை, அறிவு மன்றத்தில் நிற்கவைத்துக் கேட்க வேண்டும்—அறிவுக்கு அழிவு நேராதிருக்க வேண்டுமானால். ஆனால் அதற்கு நேர்மாறாக, கலையின்பேரால் அறிவுக்கொலை செய்திருப்பதைக் கண்டறிந்து கூறுபவர்களைத்தான் பிடித்திழுத்து, அறிவு மன்றத்தில் அல்ல, கலை அரங்கில், நிறுத்திக் குற்றம் சாட்டுகிறார்கள்! வேதனை தரும் விசித்திரம்!

ஆனால், கலைக்காக எதையும் செய்யலாம், கலையின் பேரால் எதையும் தீட்டலாம் என்று கருதும் போக்கினர், அறிவு மன்றத்தாரால் விசாரிக்கப்படும் நாள், விரைந்து வந்துகொண்டிருக்கிறது!

கோயில்களிலே, உள்ள ஆபாசமான கல்லுருவங்களை, நீக்கிவிடவும், அவ்விதமான ஓவியம் தீட்டப்பட்டிருப்பின் அழித்துவிடும்படியும், ரபண சீடரின் ஆட்சியிலே உள்ள இப்போதே, உத்தரவு பிறப்பித்துள்ளனர். பல கோயில்களிலே, காணலாம், கண்டதும் அருவருப்பைத் தரும் ஆபாசக் காட்சிகளைக் கல்லில் செதுக்கியிருப்பதை— கலையின்பேர் கூறிச் செய்யப்பட்ட காரியம்— இதோ இப்போது, அந்தக் 'கலை' அழிகிறது! கலையின் பேரால் எதையும் செய்யலாம், எவ்விதமிருப்பினும் ஏற்றுக்கொள்வர், என்ற ஆணவப் போக்கு அழிந்துபடுகிறது. கலையின் பேர் சொன்னால்கூட, ஆபாசத்தை இனி அனுமதிக்கமுடியாது, என்று, ஆவணி அவிட்டத்துக்கும் விடுமுறை விடும் அளவு பழைமைப் பித்தர் நிறைந்த ஆட்சியாளர்களின் காலத்திலேயே, உத்தரவு பிறந்துவிட்டது என்றால்...............!!

## பிறப்பு

கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடக சபா நடிகர் தோழர் இராசேந்திரன் மனைவி பங்கஜம் அம்மாளுக்கு 19—11—48-ல் ஆண் மகவு பிறந்து தாயும் சேயும் நலமே உள்ளனர்.

## மதிப்புரை.

### வாழ்க்கையில் வெற்றி

[ஆசிரியர்: எம். ஆர். எம். அப்துற்றஹீம் பி. ஏ. கிடைக்குமிடம்: யூனிவர்ஸல் பப்ளிஷர்ஸ். 155/156 அங்கப்ப நாயக்கன் தெரு, சென்னை. விலை ரூ 2-8-0.]

'வாழ்க்கையில் வெற்றி'—மனித சமுதாயம் கொள்ள வேண்டிய உயர்ந்த குறிக்கோள். அக்குறிக்கோளை அடைய வேண்டி எத்தனையோகோடிக்கணக்கான மக்களுக்கு வழிவகைகளை வகுத்துக்காட்டி, அப்பெரு நெறிகளில் அவர்களை ஊக்குவிக்கமுற்படுகிறார் இளம் எழுத்தாளர் நண்பர் எம். ஆர். எம். அப்துற்—றஹீம். பரந்த அனுபவதிற்குப் பிறகே எழுதக்கூடிய ஒரு நூலைத் தம் இளம் வயதிலேயே எழுதிமுடித்திருக்கிறார். வாழ்க்கையில் வெற்றியடைந்த பல வித்தகர்கள், வீரர்கள், வீராங்கனையர், வினை மாண்புடையோர், பேரறிஞர்கள், நுண்கலை வல்லுநர், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் வரலாறுகளைச் சான்றுக்கமைத்து அவர்களை நம்மனக்கண்முன் நடமாட விடுகின்றார். ஒவ்வொருவரைப் பற்றியும் அறிமுகம் ஆகும் போது அவர்களைப்போல நாமும் ஆகவேண்டும் என்ற அவா நம் உள்ளத்தில் ஊறி எழுகிறது. நம் உள்ளத்தை உருக்கி, உணர்வைத் தன் வயப்படுத்துவதாக அமைந்துள்ளது இந்நூல். இது ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெற வேண்டிய அரிய நூலாகும். ✲

## செங்கல்பட்டு ஜில்லா ஜட்ஜ் கோர்ட்டு

S. c. o. p. No. 79 of 1948

N. பாலகிருஷ்ணன்—மனுதார்

காலஞ்சென்ற பி. நரசபைய்யா சொத்துக்கள் விஷயமாய் ஷை யார் குமாரராகிய மனுதார் N. பாலகிருஷ்ணன் Succession Certificate வாங்க ஷை மனுதார் மனு தாக்கல் செய்து ஷை கேசு 1948 டிசம்பர் மீ 20ந் தேதி விசாரணைக்கு வாய்தா போட்டிருக்கிறது ஆக்ஷேபனை உள்ளவர்கள் வாய்தா தேதியில் ஆஜராக வேணும்.

A. கிருஷ்ணராவ்.
மனுதாரின் வக்கீல்
செங்கல்பட்டு 10-11-1948.

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.